விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 30 சனிக்கிழமை (13.06.2009) தொலைபேசி 222 3378,222 7829 ஒலி 176

SATS-TECH ENGINEERS

ICC WORLD TWENTY20 ENGLAND 09

Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call :-222 5908 / 222 8812

## மனித உரிமைகள் அமைப்பு இலங்கை மீது சீற்றம்

# முகாம்களில் தடுத்து வைத்துள்ள மக்களை புலிகள் போல அரசாங்கம் நடத்துகின்றது

### தேசிய அவமானம் என்றும் வர்ணிப்பு

(நியூயோர்க்)

நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை விடுதலைப் புலிகளைப் போல அரசு நடத்துகிறது எனக் கூறியுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு, இச் செயல் ஒரு தேசிய அவமானம் எனவும் வர்ணித்துள்ளது.

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் மூன்று இலட்சம் மக்களில் பலர், இலங்கை அரச அதிகாரிகளால் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டால் வெளியே (12ஆம் பக்கம் பார்க்க)

### த.தே.கூட்டமைப்பினர் அத்வானியை சந்தித்துப் பேசினர்

(புதுடில்லி)

இந்தியா சென்று அங்குள்ள தலைவர்களுடன் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், மாவை. சேனாதிராஜா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று பாரதிய ஜனதாக் கட்சித் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான எல்.கே.அத்வானியைச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்புத் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு விரைவில் ஐ.நா. முக்கிய கடிதம் அனுப்பும்

# தமிழர்களுக்கு உரிமை வழங்க மறுத்தால் வரலாறு திரும்புவதை தடுக்கமுடியாது

## ஐ.நா. செயலர் மீண்டும் வலியுறுத்து



(நியூயோர்க்)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த இறுதிப் போரில் சர்வதேச போர் விதி முறைகள் மீறப்பட்டது குறித்து வெளிப்படையான விசாரணை நடத்த பன்னாட்டு குழுவிற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று இலங்கை அரசை ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

### வண்ணை வீரமாகாளி இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க யாழ். வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக் கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இம் மஹோற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது. (ந-4)

## முல்லை. சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி நீதிமன்றில் ஆஜர்

### ஏனைய மூவர் பற்றித் தகவல் இல்லை

(கொழும்பு)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மருத்துவ மனையில் இறுதிவரை பணியாற்றி பின் பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள நான்கு மருத்துவர்களில் ஒருவர் நேற்றைய தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்பிமுத்து சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் துரைராஜா வரதராஜா, முல்லைத்தீவு பொது மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் வீரகத்தி (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனின் மரணச் சான்றிதழை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணச் சான்றிதழைச் சமர்ப்பிக்குமாறு கொழும்பு உயர் நீதி மன்ற நீதிவான் குமுதினி விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளதாக சிங்கள நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படு கொலைச் சம்பவம் குறித்த விசாரணைகளின் முதலாம் பிரதிவாதியான பிரபாகரனது மரணச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிட்ட நீதிபதி, நீதிமன்ற கோப்பு பராமரிப்புக்குக் குறித்த மரணச் சான்றிதழ் அவசியம் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் சிலரும் கதிர்காமர் படுகொலை வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### புலிகளுடன் தொடர்பு லண்டனில் 2 வருட சிறை

(லண்டன்)

வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் உபகரணங்களை விடுதலைப் புலிகளிற்கு வழங்கியதாக கூறப்படும் குற்றச்சாட்டில் பிரித்தானியாவில் வசிக்கும் தமிழர் ஒருவருக்கு லண்டன் நீதிமன்றம் இரண்டு ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

தெற்கு லண்டனில் வசிக்கும் சொத்து மதிப்பீட்டாளரான அருணாச்சலம் கிருசாந்தகுமார் என்பவர் விடுதலைப் புலிகளிற்கு வெடி பொருட்களை வழங்குவதை ஒருங்கிணைத்து நடத்திவந்தார் என்ற வழக்கில் கடந்த மாதம் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அவர் முன்னெடுத்து வந்த மனித நேயப் (12ஆம் பக்கம் பார்க்க)

# 6 இலட்சத்து 60 ஆயிரம் மக்கள் இலங்கையில் இடம்பெயர்வு

### மீளக்குடியமர்த்தல் அவசியம் என்கிறது ஐ.நா.

(கொழும்பு)

இலங்கையில் துரிதமாக மீள குடியமர்த்தப்பட வேண்டிய 6 இலட்சத்து 60 ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் வசிப்பதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான மனித உரிமைகள் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அவர்கள் அனைவரையும், தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு, தனியார் துறையினரின் ஒத்துழைப்பும் அவசியம் என அதன் பிரதிநிதி எமின் எவாட் தெரிவித்துள்ளார்.

இந்த தொகை மிகவும் அதிகரித்த எண்ணிக்கை எனவும், அவர்களின் மீள் குடியமர்த்தல் பணிகள் மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கிடையில், இலங்கை அரசாங்கம், மேல் மாகாணம் தவிர்ந்த மற்றைய மாகாணங்களின் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமான நடவடிக்கைகளில் சரியான நடை முறையினை பின்பற்றியிருக்கவில்லை.

அண்மைய மோதல்களில் மாத்திரம் 3 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அத்துடன் ஏற்கனவே மோதல்களினால் இடம்பெயர்ந்த நிலையில் மன்னார் போன்ற பகுதிகளிலும் (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை தொடர்பான தெளிவு இருந்தமையால் ஐ.நா. வாக்கெடுப்பில் யப்பான் பங்கேற்கவில்லை

## விசேட தூதுவர் அகாசி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பான தெளிவு எமக்கு இருந்ததனால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபை நடத்திய வாக்கெடுப்பில் நாம் கலந்து கொள்ளவில்லை என்று இலங்கைக்கான யப்பானிய சிறப்புத் தூதுவர் யசூஷி அகாசி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்ட யசூஷி அகாசி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேலும் தெரிவித்ததாவது,

இனப் பிரச்சினைக்கு தீர்வாக அரசியலமைப்பில் உள்ள 13 வது திருத்தச் சட்டத்தை முழுமையகா நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியாக உள்ளார்.

இலங்கைக்கான சமாதானக் கட்டமைப்பு, புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு தொடர்பிலான யப்பானிய பிரதிநிதி என்ற வகையில் எனது பயணம் பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

இதே தகைமையுடன் இலங்கைக்கான எனது பயணம் 18 ஆவதாகவுள்ளது. எனது பயணம் இரு நோக்கங்களைக் கொண்டிருந்தது.

ஒன்று மனித உரிமை நிலை குறித்து பார்வையிடுவது மற்றது எடுக்கப்பட்டு வருகின்ற அரசியல் மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதாகும்.

மனித உரிமை நிலை எனும் போது விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மோதலின் போது இடம் பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களின் நிலைமை குறித்து பார்வையிடுவதாகும்.

அதேபோன்று பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்படுவதற்கு எடுக்கப்படும் அரசியல் மறு சீரமைப்பின் நடவடிக்கை குறித்து அவதானிப்பதாகும்.

தடுப்பு முகாம்களில் உள்ள 60- வயதுக்கும் மேற்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் உள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு தேவையான தங்குமிட வசதி செய்யப்பட்டு வருகின்றது.

தடுப்பு முகாம்களில் சில குறைபாடுகள் உள்ளன. நீர் வழங்கல் போதுமான நிலையில் முழுமையாக உள்ளது எனக் கூற முடியாது. அதேபோன்று சுகாதார பராமரிப்பு தொடர்பில் வடக்கில் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பருவ மழை தொடங்கி விடும் என்பதால் அதற்கு முன் அவை செய்யப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் அனைத்துலக நாடுகளுடன் இலங்கை அரசாங்கம் புரிந்துணர்வை ஏற்படுத்துவது தேவையாகவுள்ளது. இதற்கு அந்த நாடுகளுடன் அரசாங்கம் கலந்துரையாடலை நடத்த வேண்டும். முக்கியமாக ஜனநாயகம், சமாதானம், நீதி மற்றும் செல்வச் செழிப்பை ஏற்படுத்த ஏனையவர்களின் உதவியும் ஒத்துழைப்பும் அவசியமாகவுள்ளது. இலங்கையின் இறைமை, சுயாதிபத்தியத்தில் அவர்கள் தலையிடக் கூடாது. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபையில் இலங்கை வெற்றி பெற்றதற்கு ,அதில் உள்ள பல நாடுகள் ஆதரவளித்ததே காரணமாகும். இந் நிலையில் எதிராக வாக்களித்த நாடுகளும் உள்ளன. இலங்கை தொடர்பில் ஒவ்வொரு நாடுகளுக்கும் பல்வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இந் நிலையில் நிலைமை குறித்து கலந்துரையாடி தெளிவு படுத்த வேண்டியுள்ளது.

இலங்கை நிலைமை குறித்து எமக்குத் தெளிவு இருந்ததனால் அதில் நாம் கலந்து கொள்ளவில்லை. இது தொடர்பாக நாம் இலங்கையைத் புறம் தள்ளவில்லை. எமது நிலைப்பாட்டை அரசு ஏற்றுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் 80 வீதமானவர்கள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் றோகித போகொல்லாகம உறுதியளித்துள்ளார். நாம் மீள குடியேற்றத்துக்கு ஏதுவான நடவடிக்கைகளுக்கு உதவத் தயாராகவுள்ளோம்.

2003 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தையின் போது நாம் 4 பில்லியன் டொலரை அன்பளிப்பு செய்ய முன்வந்தோம். துரதிர்ஷ்டவசமாக புலிகள் இதனை புறக்கணித்தனர்.

நாம் இலங்கையில் சமாதானம் ஏற்படுத்துவதற்கு உதவத் தயாராக உள்ளோம். நல்லிணக்கம் மூலமே சமாதானத்தை அடைய முடியும் என்றார் அவர். (ந-5)

# புலிகளுக்கு கூஜா தூக்கிய கூட்டமைப்பை அறையில் வைத்து பூட்ட வேண்டும்

## மேர்வின் சில்வா கர்ச்சிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கூஜா தூக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை காற்றுக்கூடப்புக முடியாத அறைக்குள் வைத்து பூட்டவேண்டும் என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது,

இந்த நாட்டில் தோல்வியுறாத மன்னனாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நான் காண்கிறேன். பிரபாகரன் கொல்லப்பட்டதால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

எமது பிள்ளைகள் நிம்மதியாக பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். எமது பிள்ளைகள் பயம் இன்றி பாடசாலை செல்கின்றனர். எமது ஜனாதிபதி அச்சமற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலிகளுக்கு கூஜா தூக்கியவர்கள். அவர்களை காற்றுப்புக முடியாத அறைக்குள் வைத்துப் பூட்ட வேண்டும்.

சுனந்த தேசப்பிரிய, போத்தல ஜயந்த இவர்கள் எல்லாம் ஊடகவியலாளர்களா? இந்த ஊடகவியலாளர்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள். இவர்களை எப்படி ஊடகவியலாளர்கள் எனக் கூறமுடியும்?

இந்த நாட்டின் எல்லாளனுக்கு எவரும் உதவக்கூடாது. அவ்வாறு உதவி செய்தவர்களை நாம் அடையாளம் காண வேண்டும். இந்த நாட்டின் தோல்வியுறாத மன்னர் மகிந்த ராஜபக்ஷ மட்டுமே என்றார் அவர். (ந-5)

# சாவ. மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள மக்கள் நாளை புதிய முகாமுக்கு

(யாழ்ப்பாணம்)

மோதல்கள் காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் நாளை புதிய நலன் புரி முகாமுக்கு மாற்றப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுமென யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் கடந்த இரு மாத காலமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் தற்போது அல்லாரையில் புதிய நலன்புரி கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு இடம் பெயர்ந்த மக்கள் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இதன் மூலம் அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் குறித்த நலன்புரி முகாமுக்கு மாற்றப்பட்டனர்.

இதனால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் தற்போது சீராக நடைபெற்று வருகிறது.

இந் நிலையில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நாளை நலன்புரி முகாம்களிற்கு மாற்றுவதனால் நாளை மறுதினம் திங்கட்கிழமை அங்கு கல்வி நடவடிக்கைகள் சீராக ஆரம்பமாகும் என்றார்.

இதேவேளை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி நலன்புரிமுகாமுக்கு மாற்றப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வேதி. செல்வரட்ணம் தெரிவித்தார். (ந-5)


**மாநகரசபை யாழ்ப்பாணம்**

**கேள்வி அறிவித்தலுக்கான காலநீடிப்பு**

கடந்த 09.06.2009 அன்று பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்ட மாநகரசபைக்குரிய சனசமூக நிலையங்கள்/ நூலக நிர்மாண மற்றும் நூலக மீதி வேலைகளுக்கு என்னால் கோரப்பட்ட கேள்விகளுக்குரிய கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி 12.6.2009- ம் திகதியிலிருந்து 19.6.2009 -ம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகிறேன்.

மு. செ. சரவணபவ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

12.6.2009
திகதி
(C-2575)



**விற்பனைக்கு**

கந்தர்மடம் அரசடி வீதி,
கொக்குவில் கே.கே.எஸ். வீதியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளிற்கு:
0776245267

(2828இ)



# தேசிய மட்ட உதைபந்தாட்டம் நெல்லியடி ம.ம.வி. அணி வெற்றி

(கொழும்பு)

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனம் தேசியமட்டத்தில் நடத்திவரும் 17 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் தற்போது கொழும்பில் நடைபெற்று வருகின்றது.

கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரி மைதானத்தில் யாழ்.மாவட்ட சம்பியனான யாழ்.நெல்லியடி ம.ம.வித்தியாலயத்துக்கும் காலி மாவட்ட சம்பியனான பி.ரி.எஸ்டெல்லாக் கல்லூரிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயஅணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் தனேஷ் 2 கோல்களையும், அரிகரன் ஒரு கோலினையும் போட்டு வெற்றிக்கு வழி அமைத்தனர். இன்று நெல்லியடி மத்திய.ம.வித்தி யாலய அணி பொலநறுவை மாவட்ட சம்பியனான பண்டிவெவ கல்லூரி அணி யினை எதிர்த்து விளையாடவுள்ளது. (ந-14)



SOND சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து பாடசாலைகளில் மரம் வளர்ப்பு செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதன் செயற்பாடாக யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் மரம் நாட்டும் நிகழ்வில் பாடசாலை அதிபர் மாணிக்கம் பாடசாலை வளவில் மரம் நாட்டுவதையும் அருகில் SOND நிறுவனப் பணிப்பாளர் மற்றும் மாணவர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## புளியின் மகத்துவம்

அந்த ஆளைக் கண்டாலே போதும்... எனக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது போல் ஆகிவிடும் என்று சொல்வதுண்டு.

வாளியில் புளியைக் கரைப்பது சரி... வயிற்றில் புளியைக் கரைப்பது எப்படி?

"ரொம்ப பயமுறுத்தி விட்டார்" என்று சொல்வதற்குப் பதில் இப்படிச் சொல்வார்கள்.

அது சரி...

புளி என்ன அவ்வளவு மோசமான ஒன்றா?

"புளியை ஏதோ ருசிக்காகத்தான் உணவில் சேர்க்கிறோம். மற்றப்படி வேறெந்த பிரயோசனமும் அதில் இல்லை" என்று சிலர் நினைக்கலாம் அது தவறு.

அதற்காகத்தான் இன்றைய இன்று ஒரு தகவலை புளிக்கு ஒதுக்கலாம் என்று ஒரு யோசனை.

100 கிராம் புளியில் 283 கலோரிச்சத்து இருப்பதாக நிபுணர்கள் சொல்கிறார்கள்.

சில மருந்து சாப்பிடும் போது புளி சேர்க்கக் கூடாது என்று பத்தியம் உண்டு. ஆனால் புளியே ஒரு நல்ல மருந்து.

தாகத்தைத் தணிக்க – பசியைத் தூண்ட – வீக்கத்தைக் குறைக்க இப்படி எல்லாவற்றுக்கும் இதை உபயோகப்படுத்தலாம். சுத்தமான தண்ணீரில் சிறிதளவு புளியைக் கரைத்து அதில் ஒரு ஆறு கரண்டி காலையில் சாப்பிடுங்கள். இது பசியை அதிகப்படுத்தும்.

உடம்பின் எந்த இடத்திலாவது வீக்கம் வலி இருக்கிறதா? புளிச்சாறு, உப்பு இரண்டையும் கலந்து தேய்த்து விடுங்கள். தினமும் இரண்டு தடவை செய்தால் போதும்.

வெறும் புளியம்பழத்தைச் சாப்பிட்டால் ஈறில் இருந்து இரத்தம் வருவது நின்று விடும்.

சாப்பிட்ட பின்னர் ஒரு மணி நேரம் கழித்து நன்றாக பழுத்த புளி ஒன்றை சாப்பிடுங்கள். அது நல்லது.

சமிபாட்டுப் பிரச்சினையா? பசியின்மையா? அதற்கும் ஒரு புளி வைத்தியம் உண்டு.

நன்றாக கொதித்தாறிய பாலை எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் 4 அல்லது 5 துளி புளிச்சாறு விட வேண்டும்.

இதன் போது பால் பிரிந்து அடியில் தங்கிவிடும். அதன் மேல் ஒரு திரவம் தண்ணீர் போல் இருக்கும். அதை எடுத்து தினமும் 3 வேளை பருக வேண்டும்.

பாலில் இருக்கும் அத்தனை புரோட்டினும் இந்த திரவத்தில் இருக்கும். அதே நேரத்தில் இது சுலபமாக செரிமானமடைந்து விடும்.

புளியம் விதைகளை தூளாக்கி வைத்திருக்கலாம். அதிலும் பல மருத்துவ குணங்கள் உண்டு. இந்தத் தூளில் 1 மேசைக்கரண்டி எடுத்து நீரில் கலந்து தினமும் 3 வேளை சாப்பிட வயிற்றுப் போக்கு நின்றுவிடும்.

இந்த தூளை அரை மேசைக்கரண்டி எடுத்து சம அளவு தேனுடன் கலந்து தினமும் இருவேளை சாப்பிட்டால் இரத்தப் போக்கை (Bleeding) நிறுத்தி விடும்.

விஷம் குடித்து விட்டால் அடர்த்தியான புளிச்சாறு திரும்பத் திரும்பக் கொடுத்து வாந்தியெடுக்க வைத்து விடலாம்.

10 மில்லி லீற்றர் நீரில் 6 கிராம் பழுத்த புளியை இரண்டு மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.

இதையெடுத்து 4 மணி நேரத்துக்கொரு தடவை கொடுத்தால் வாந்தியை நிறுத்திவிடும். ஆனால் இந்தக் கரைசலை ஒவ்வொரு முறையும் புதிதாக தயார் செய்ய வேண்டும்.

புளிச்சாறு, கராம்பு, இலவங்கப்பட்டை இது மூன்றையும் நீரில் கரைத்து உள்ளெடுக்க உணவுப் பாதையில் எற்படும் அழற்சிகள் சீராகும்.

25 கிராம் புளியை, 120 மில்லி லீற்றர் நீரில் ஒரு மணித்தியாலம் ஊறவைக்க வேண்டும். அதன் பின் 6 கிராம் சீனி சேர்க்க வேண்டும். இது எதற்கு மருந்து தெரியுமா?

தலை இலேசாக இருப்பவர்களுக்கும், நிதானமில்லாமல் இருப்பவர்களுக்கும் இது நல்ல மருந்து மற்றையதை மறந்தாலும் இதை மட்டுமாவது ஞாபகம் வைத்திருங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

### வடக்கு கிழக்கில்

# பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 1025 வெற்றிடங்களை நிரப்ப அரசு முடிவு

## அமைச்சர் அநுர யாப்பா தகவல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் 1025 பொது முகாமைத்துவ உதவியாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்படி கிழக்கின் உதயம் வடக்கின் வசந்தம் ஆகிய வேலைத் திட்டங்களின் கீழ் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இந்த 1025 வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் 306 பேர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். எஞ்சியுள்ள 719 வெற்றிடங்களுக்கான பரீட்சை விரைவில் நடத்தப்படும் என்றும் அமைச்சர் அங்கு மேலும் குறிப்பிட்டார். (ஓ-6)

# மீள்குடியமர்த்தப்பட்டவர்களின் தேவைகளை உறுதி செய்வதற்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட தீர்மானம்

## யு.என்.எச்.சி.ஆர் தெரிவிப்பு

மோதல்களால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்படும் மக்களுக்கு அரசாங்கத்துடன் இணைந்து உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல்களால் மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்தவர்களின் இரண்டாம் கட்ட மீளக்குடியேற்றம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது.

இந்த இரண்டாம் கட்ட மீள் குடியேற்றத் திட்டத்துக்கு அமைய 2 ஆயிரத்து 231 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் தேவைகளை உறுதி செய்வதற்குத் தாமும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப்போவதாக யு.என்.எச்.சி.ஆர் அறிவித்துள்ளது.

மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காகத் தமது குழுவொன்று முசலிப் பிரதேசத்துக்குச் சென்றிருந்தாகவும் மீளக்குடிமர்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளைத் தொடர்ந்து வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் யு.என்.எச்.சி. ஆர் தெரிவித்துள்ளது.

இதேவேளை யு.என்.எச்.சி.ஆர் இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடித் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தவுள்ளது. சிறுசிறு சமூகங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுமெனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாக இருப்பதால் இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டாலும் அவர்கள் வருமானம் பெறும்வரை உதவிகள் செய்யப்பட வேண்டுமென உலக உணவுத் திட்டம் அண்மையில் கூறியிருந்தது.

கடந்த பல மாதங்களாக தமது விதைப்புக்களை இழந்திருக்கும் விவசாயிகள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் தமது விவசாய நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாது எனவும், எனவே மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு மக்களின் நிலைமை சுமுகமாக வரும்வரை உத்விகள் வழங்கப்பட வேண்டுமெனவும் உலக உணவுத் திட்டம் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## இராசி பலன்

*13.06.2009*

*(வைகாசி 30, சனிக்கிழமை)*

*பஞ்சமி முற்பகல் 9.12 மணிவரை*

*அவிட்டம் பின்னிரவு 1.47 மணிவரை*

*இராகுகாலம் 8.52-10.22 மணிவரை*

*சுபநேரம் 2.52-4.22 மணிவரை*

*சித்தாமிர்தம்*

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, பெருமையடைதல், பொருள் சேர்க்கை. |
| இடபம் | தொழில் மேன்மை, சுபநிகழ்வு, இனிய செய்தி, முயற்சி கைகூடும். |
| மிதுனம் | ஆன்றோரால் மதிக்கப்படுதல், அதிக பிரயாசை, புதிய முயற்சி, ஆரோக்கியக் குறைவு. |
| கடகம் | எதிர்பாராத அச்சம், மரியாதைக் குறைவு, முயற்சி தாமதம், போசன சுகம். |
| சிங்கம் | கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, பயணம். |
| கன்னி | சுகவாழ்வு, பகைவர் நேசம், முயற்சி கைகூடும், செய்தொழில் விருத்தி. |
| துலாம் | காரிய இடையூறு, மனச்சஞ்சலம், எதிர்பாராத நன்மை, வேலைச்சுமை. |
| விருச்சிகம் | கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், சுபசெய்தி, அதிக பிரயாசை. |
| தனுசு | இனிய சம்பவம், கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, வாகன சுகம். |
| மகரம் | தொழில் சிந்தை, வாக்கு மேன்மை, கடின முயற்சி, தன விரயம். |
| கும்பம் | சிந்தனை மிகுதி, போசன சுகம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| மீனம் | உணர்ச்சி வசப்படல், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம், சயன சுகக் குறைவு. |

**வளவன்**

## பரிசளிப்பு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் செல்வி ந. பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக்கழக உயர்பட்டபடிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வின் ஆசியுரையை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை முன்னாள் அதிபர் செ.சிவநடராசா வழங்கவுள்ளார். (4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 130 |
| பச்சைமிளகாய் | 55 | 70 | 80 |
| தக்காளி | -- | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 80 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 50 | 80 | 80 |
| பூசணி | 20-50 | 30-70 | 20-50 |
| புடோல் | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 75 | 75 | 70 |
| சின்ன வெங்காயம் | 45 | 60 | 60-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 60 |
| வெண்டிக்காய் | 55 | 70 | 100 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | -- |
| பயிற்றங்காய் | 60 | 70 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 250 |
| பலாக்கொட்டை | -- | -- | 60 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 10-20 |
| தேசிக்காய் | 60 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |

## கோப்சிற்றி திறப்பு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் 3 கோப் சிற்றிகளை திறந்து வைக்கவுள்ளது. இதன் முதற் கட்டமாக இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நெல்லியடி மடத்தடியில் ஒரு கோப் சிற்றியை திறந்து வைக்கவுள்ளது.

மேலும் இக் கோப் சிற்றியை யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திறந்து வைக்கவுள்ளதுடன் கரவெட்டி பிரதேச செயலாளர் கலந்துகொள்ளவுள்ளார்.

வல்வெட்டித்துறை சோழங்கன் பகுதியிலும் அடுத்த வாரம் மேலும் இரண்டு கோப் சிற்றிகளை திறந்து வைக்கப்படவுள்ளன. (ஓ-4-10)

## தொண்டர் நன்னடத்தை உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பிள்ளைகளுக்கு நலன்புரி வசதிகளை வழங்குவதற்காக தொண்டர் நன்னடத்தை உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம்திகதி காலை 9 மணிக்கு இல 48 , காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பதவிக்கு விண்ணப்பித்தவர்களை உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் காலை 9 மணிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சைக்கு வருகை தருமாறு யாழ்.பிராந்திய ஆணையாளரைகேட்டுக்கொள்கின்றார்.

மேலும் இவ் நேர்முகப்பரீட்சை இதே திகதியில் சிறுவர் நன்னடத்தை திணைக்களம், வரோதாய நகர், கன்னியா வீதி, திருகோணமலையில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் நடத்தப்படும் என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, சிதம்பரக் கல்லூரியில் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாபெரும் கலை, விஞ்ஞான , சமூக ஆக்கத்திறன் கண்காட்சி கல்லூரி அதிபர் சி.மகேந்திரன்தலைமையில்நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் மாணவர்களின் கலை,விஞ்ஞான,சமூக ஆக்கத் திறன்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் மேற்படி கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை நடைபெற இருந்ததாகவும் தவிர்க்க முடியாத காரணத்தால் திகதி மாற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ஓ-4)

## கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கியூடெக் -கரித்தாஸ் நிறுவனத்தினால் 21 இலட்சம் நிதிச் செலவில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை ஆகிய பிரதேச செயலகங்களில் கணனிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதனை கியூடெக் -கரித்தாஸ் நிறுவனத்தின் சுனாமி வாழ்வாதார செயற் திட்டப் பிரிவினர் ஒழுங்கு செய்து வருகின்றனர்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 11 இலட்சம் ரூபாய் செலவில் கைத்தொலைபேசி திருத்துதல், மோட்டார் வாகனம் திருத்துதல், குளிரூட்டி திருத்துதல், துணியில் பிறிண்ற் செய்தல் போன்ற தொழிற் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை சிறுவர் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 51 ஆயிரத்து 769 ரூபாய் நிதிச் செலவில் கைதடி, எழுதுமட்டுவாள் தற்காலிக பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆயிரத்து 450 உணவுத்தட்டுக்கள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் சிறுவர் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் அப் பாடசாலை அதிபர்களிடம் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கொடிகாமம் இராமவில் தற்காலிக பாடசாலைக்கென நான்கு தொகுதிகள் கொண்ட சிறுவர் பாடசாலை 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து கையளிக்கப் படவுள்ளதாகவும் சிறுவர் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 29 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 122 பாடப்புத்தகங்கள் கொடிகாமத்தில் இயங்கும் தற்காலிக பாடசாலை அதிபரிடம் கையளிக்கவுள்ளதாகவும் கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (ஓ)




## இளவாலை வடக்கு மக்களுக்கு கியூடெக்-கரித்தாஸ் உதவி

(யாழ்ப்பாணம்)

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக அப்பகுதி மக்களுக்கு ஆடு, மாடு மற்றும் கோழி என்பன வழங்கப்பட்டுள்ளன.

தலா 35 ஆயிரம் ரூபா பெறுமதி யான இரண்டு ஆடு மற்றும் அவற்றிற்கான கொட்டில்கள் 10 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் தலா 55 ஆயிரம் ரூபா பெறுமதியான மாட்டுக்கன்று மற்றும் கொட்டில் நான்கு பேருக்கும் தலா 22 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிகள் அதற்கான தீனி என்பன 5 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றினைவிட சுயதொழில் கடன் வீட்டுத் திட்டம் பயனாளிகளுக்கான உபகரணங்கள், மரக்கறி விதைகள், கூட்டுடெரு தயாரிக்கும் இயந்திரம் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான கடன் தொகைகளையும் உதவிகளையும் மேலும் வழங்குவதற்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் இணங்கியுள்ளதாக இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ச)

## மாணவர் கௌரவிப்பு

(அல்வாய்)

பருத்தித்தறை அஞ்சலியகத்தினால் 2008 ஆம் ஆண்டு க.பொ. த சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக்கௌரவிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதனும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் செ.சுரேந்திராவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-6-10)

## ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய வெளிநாட்டுக் கிளையின் அனுசரணையுடன் கர வெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் ஜி.சி.ஈ உயர்தரப்பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடத்தவுள்ளது.

இதன் பிரகாரம் கணக்கீடு பாடத்திற்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு டி.சாம் ஆசிரியராலும் பொருளியல் பாடக்கருத்தரங்கு 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வி.கருணாகரன் ஆசிரியராலும் நடத்தப்படவுள்ளது.

கருத்தரங்கின் போது பாடக் குறிப்புகளும் இலவசமாக வழங்கப்படும் எனவும் ஏனைய பாடங்களுக்கான கருத்தரங்கு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் அறிவித்துள்ளது. (ஓ-10)

## புதிய இயக்குநர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தின் வவுனியா கிளை நிறுவனத்திற்கு புதிய இயக்குநராக அருட்பணி கைமர் பீரிக்ஸ் கனீசியஸ் றாஜ் அடிகளார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்பு இப்பணியினை பல இடம்பெயர்வுகள், எறிகணைத் தாக்குதல்கள் நடுவே நெஞ்சுரத்துடனும், அர்ப்பணிப்புடனும் வன்னி மக்கள் மத்தியில் இத் துயர் துடைப்புப் பணியினை முன்னெடுத்துச் சென்ற அருட்தந்தை வசந்தசீலன் அடிகளார் வன்னி இறுதிச் சமர்களின் போது எறிகணைத் தாக்குதல் தனது இடது காலை இழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஓ)

## வட இலங்கை சங்கீத சபையின் 2009 ஆம் ஆண்டுக்கான அறிமுக பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையின் 2009 அம் ஆண்டுக்கான அறிமுகப் பரீட்சை அகில இலங்கை ரீதியாக இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகள் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மருதனர்மடம் இராமநாதன் கல்லூரி, இந்துமகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, வட இந்து மகளிர்கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

மேலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த பரீட்சை வட மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் நேரம் தவறாது பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்கும்படி வட இலங்கை சங்கீத சபையின் தலைவர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)

## விசேட வகுப்புக்கள்

(சித்தங்கேணி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள விசேட வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 29 ஆம்திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-17)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தரம் 11 இல் வரலாறு பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட செயற்றிட்டச் செயலமர்வு நாளை ஞர்யிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)


இலங்கை வங்கியும் வலம்புரியும்

BOC இணைந்து நடத்தும்

க.பொ.த.உயர்தரம் (2008) "3A", "2AB"

சித்தி பெற்ற தென்மராட்சி வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு

இடம் : சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபம்

காலம் : இன்று 13.06.2009 சனிக்கிழமை

நேரம் : முற்பகல் 9.00 மணி

ஆரம்பம் : மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
அகவணக்கம்

வரவேற்புரை : திரு.எஸ்.சந்திரகுமார் (முகாமையாளர்– இலங்கை வங்கி – சாவகச்சேரி)

தலைமையுரை : திரு.ந.சிவரட்ணம் (உதவிப் பொது முகாமையாளர்–இலங்கை வங்கி – வட. பிராந்தியம்)

பிரதம விருந்தினர் உரை : பேராசிரியர் கு.கந்தசாமி

சிறப்பு விருந்தினர்கள் உரை :

திரு.என்.விஜயசுந்தரம் (பிரதம ஆசிரியர் – வலம்புரி)

திரு.செ.ஸ்ரீநிவாசன் (பிரதேச செயலர் – தென்மராட்சி)

திரு.கு.பிரேமகாந்தன் (வலயக்கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி)

திரு.ஈ.கயிலைநாதன் (இளைப்பாறிய அதிபர்)

திரு.மு.நாகேந்திரராசா (இளைப்பாறிய அதிபர்)

திரு.வி.சி.சிவநாதன் (பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி– யா.மா)

திரு.எஸ்.செந்தில்நாதன் (நிர்வாக முகாமையாளர் இலங்கை வங்கி – வ.பி)

திரு.கே.பாலசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற உதவிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி – வ.பி)

திரு.கே.உலகநாதன் (ஓய்வுபெற்ற செயற்பாட்டு முகாமையாளர் இலங்கை வங்கி – வ.பி)

சான்றிதழ் வழங்கலும் நினைவுப்பொருள் வழங்கலும்

ஏற்புரை : திரு.அ.கயிலாயபிள்ளை (அதிபர் சார்பில்) (அதிபர்– யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

ஏற்புரை : செல்வி வி.இமயவல்லி (மாணவர் சார்பில்), (யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நன்றியுரை : திரு.கே.சுந்தரம் (உதவி முகாமையாளர்– இலங்கை வங்கி:சாவகச்சேரி)

நிகழ்ச்சித்தொகுப்பு : திரு.ரி.புவனேந்திரன் (முகாமையாளர்– இலங்கை வங்கி:அச்சுவேலி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இலங்கை வங்கி
சாவகச்சேரி

# பொதுத் தேர்தல் ஒன்றில் வாக்களிப்பது எப்படி?

தற்போது இலங்கையில் தேர்தல் காற்று வீசிக் கொண்டிருக்கிறது. விரைவில் ஒரு பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தல் அல்லது இரண்டும் நடைபெறக் கூடிய வாய்ப்புகள் அதிகரித் துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் வாக்காளர் ஒவ்வொருவரும் பெறுமதி மிக்கவர்களாக கருதப்படுகின்றனர்.

ஆகவே அவர்கள் தாம் மேற்படி தேர்தல்களில் வாக்களிக்க வேண்டுமாயின் எத்தகைய தகைமைகளை கொண்டிருக்க வேண்டும் என்பதை அறிந்து வைத்திருத்தல் நல்லது.

## சட்டம் சொல்வது என்ன?

### இலங்கையில் யார் வாக்காளர் ஆகிறார்கள்?

அரசியலமைப்பு சட்டத்தின் 88ஆம் உறுப்புரையின் படி ஆள் ஒவ்வொருவரும் 89ஆம் உறுப்புரையின் கீழ் கூறப்பட்டுள்ள தகைமையீனங்களுக்குட்படாமல் இருந்தால் ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்ற தேர்தல்களிலும் ஏனைய தேர்தல்களிலும் மக்கள் தீர்ப்பிலும் வாக்களிக்கத் தகுதியுடையவராக இருப்பர் எனப்படுகிறது. ஆனால் அவரது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்க வேண்டும்.

இனி வாக்காளராக வருவதற்கு தகுதியில்லாதவர்கள் யார் எனப் பார்ப்போம்.

◆ அவர் இலங்கை பிரஜையாக இல்லாவிட்டால்.

◆ பதினெட்டு வயதினை அடையாதவராக இருந்தால்.

◆ சித்த சுவாதீனமற்றவராக இருந்தால்.

4. இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கான மறியற்றண்டனையால் தண்டிக்கப்படக்கூடிய தவறு ஒன்றுக்கு ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டு அதன்பின்னர் அதனால் விதிக்கப்பட்ட ஆறு மாதங்களுக்கு குறையாத ஒரு காலத்திற்கான மறியற் தண்டனையை அனுபவித்து வருபவராய் இருந்தால்.

◆ மரணதண்டனை விதிக்கப்பட்டவராய் இருந்தால் அவர் வாக்காளராக வரமுடியாது. ஆனால் ஒருவருக்கு கட்டுப்பாடற்ற மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தால் (Pardon is Granted) அவர் வாக் காளராகலாம்.

◆ 1946 ஆம் ஆண்டின் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் கீழ், இலஞ்ச சட்டத்தின் கீழ், உள்ளூராட்சி தேர்தல் கட்டளைச் சட்டத்தின் சில பிரிவின் கீழ், தண்டனைச் சட்டக்கோவையின் சில பிரிவுகளின் கீழ்,விசேட ஜனாதிபதி விசாரணைக் குழுவின் கீழ், குற்றம் புரிந்தவர்கள் சில மட்டுப்பாடுகளுக்கு அமைய வாக்காளராக வருவதற்கு தகுதியில்லாதவர்களாகின்றனர்.

மேற்படி தகைமையீனங்கள் தவிர்ந்த ஏனையவர்கள் வாக்காளராகலாம்.

### வாக்காளராக வரக்கூடிய எல்லோரும் வாக்களிக்கலாமா?

வாக்காளர் ஒருவரது பெயர் வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அந்த வாக்காளர்கள் இடாப்பே தேர்தலுக்கு பயன்படுத்துவதாய் இருந்தால் மட்டுமே ஒருவர் வாக்களிக்கலாம். இல் லையேல் வாக்களிக்க முடியாது.

1981ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டமும் அதன் திருத்தங்களும் இதனைப் பின்வருமாறு தெரிவிக்கின்றது. மேற்படி சட்டத்தின் 4ஆம் பிரிவின் படி ஏதேனும் தேர்தலுக்கு பயன்படுத்தப்படவுள்ள வாக்காளர் இடாப்பானது தேர்தல் ஒன்றை நடத்த தேவைப் படுத்தும் பிரகடனம் அல்லது கட்டளையானது வெளியிடப்படும் தினத்தன்று அத் தேர்தலுக்கு பயன்படுத்தப்படும் தேருநர் இடாப்பாக இருத்தல் வேண்டும்.

ஆகவே தேர்தல் மாவட்டங்களுக்கு மாவட்டங்கள் சிலவேளைகளில் தேர்தல் இடாப்பு வேறுபடலாம்.

இதனால் வாக்காளர் ஒருவர் ஒவ்வொரு வருடமும் தவறாது தனது பெயரை வாக்காளர் இடாப்பில் பதிந்துகொள்ள வேண்டும். அலட்சியமாக இருக்கக் கூடாது அலட்சியமாக இருந்தால் வாக்களிக்க முடியாமல் போகும்.

சிலவேளைகளில் பல வருடங்களாக ஒருவரது பெயர் வாக்காளர் இடாப்பில் இருந்திருக்கும். ஆனால், தேர்தல் நடைபெறு கின்ற காலத்தில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் அவரது பெயர் பதியப்படாமல் விடப்பட்டிருந்தால் அவர் வாக்களிக்க முடியாது.

இது வாக்காளர் ஒவ்வொருவரும் தவறாமல் ஒவ்வொரு வருடமும் தமது பெயரை வாக்காளர் இடாப்பில் பதியப் படுகிறதா என்பதை கவனிக்க வேண்டும் என சட்டம் எதிர்பார்க்கிறது.

தேர்தல் திணைக்களம் இவ்விடயத்தில் கூடிய அக்கறை செலுத்துவதை நாம் பாராட்ட வேண்டியிருக்கிறது. சில அரசியற் கட்சிகளும் இவ்விடயத்தில்அக்கறை காட்டுவது வரவேற்க வேண்டிய விடயமாகும்.

ஆகவே வாக்காளராவதற்கு முதற் படி[illegible] ஒருவர் தன்னை பதிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பில் குறிக்கப்பட்டுள்ள இன்னுமொரு முக்கிய [illegible] என்னவெனில் வாக்காளராக இருப்ப[illegible] தகைமையுடையவரான ஆள் ஒருவ[illegible] பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான தகைமையுடைய வரா கிறார் என்பதேயாகும். அதேபோல் ஜனாதி பதி பதவிக்கும் போட்டியிடலாம். அப்பதவிகளுக்கு வேறு சில கட்டுப்பாடுகளும் உண்டு. ஆயினும் வாக்காளராக இருப்பது முக்கிய தேவையாகும்.ஞ

இல்லையேல் பாராளுமன் றத் தோதலிலோ ஜனாதிபதித் தேர்தலிலோ போட்டியிட முடியாது.

**சட்டத்தரணி கே.ஜி.ஜோன்**

### வாக்காளர் கவனிக்க வேண்டிய வேறு சில தகவல்கள்

ஏதேனும் தேர்தல் மாவட்டத்திலான தேர்தல் ஒன்றின் நோக்கத்திற்காக தபால் மூலம் வாக்களிப்பதற்கு தகுதியுடைய ஆள் ஒருவர் நேரடியாக வாக்களிக்கலாகாது. அஞ்சல் மூலமே வாக்களிக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்காளரும் ஒரு வாக்கையே பிரயோகிக்க வேண்டும்.தவறுதலாக பல்வேறு தேர்தல் மாவட்ட வாக்காளர் இடாப்பில் பெயர் பதியப்பட்டிருப்பினும் ஒரு இடத்திலேயே ஒரு வாக்கையே பிரயோகிக்கவேண்டும். இல்லையேல் தண்டனை கிடைக்கும்.

வாக்காளர் ஒருவர் அவர் எவ்வாறு வாக்களித்துள்ளார் என்பதைப் பார்க்க எவருக்கும் உரிமை கிடையாது. (தொடரும்)



யாழ் பெட்டா எசன்ஸ் சப்ளேயர்ஸ் நிறுவன ஆதரவுடன் யோகி அழகுக்கலை நிறுவனம நடாத்திய கேக் மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி யோகி அழகுக்கலை நிறுவனத்தினால் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அரச அதிபர் கே.கணேஷ் நாடாவெட்டி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கே. சிவஞானம், யோகி அழகுக்கலை நிறுவன இயக்குநர் யோகினி சண்முகநாதன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், விருந்தினர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# செட்டிகுளத்தில் இயங்கிய பிரான்ஸ் தள வைத்தியசாலையின் பணிகள் முடிபடைந்துள்ளன

## தூதரகப் பேச்சாளர் ஏ.எப்.பி.க்கு தகவல்

(கொழும்பு)

வவுனியா - செட்டிகுளம் நலன் புரி நிலையத்தில் செயற்பட்டு வந்த பிரான்ஸ் அரசாங்கத்தின் தற்காலிக தள மருத்துவமனை யின் சேவைகள் முடிபுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக பிரான்ஸ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித் துள்ள தாக எ.எப்.பி. செய்தி வெளியிட் டுள்ளது.

நூறு கட்டில்களை கொண்டு இயங்கிய இந்த தள வைத்திய சாலையில் சுமார் 2 ஆயிரத்து 500 காயமடைந்த பொதுமக்களுக்கு சிகிச்சையளித்துள்ளதாகவும் 250க்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும் அந்த பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் பிரான்ஸ் தூதரகப் பேச்சாளர் தொடர்ந்த ஏ.எப்.பி.க்கு கருத்து வெளியிடுகையில் உள்ளக இடம்பெயர்வுக்குள்ளான மக்களுக்கு உதவி வழங்கும் எமது சேவை நோக்கம் 45 நாட்கள் பணியுடன் முடிபடைந்துள்ளன. எமது கடமையை செய்துள்ளோம்.

எனினும் சர்வதேச நிவாரண முகவர் நிலையங்கள் ஊடாக பிரான்ஸ் அரசாங்கத்தின் மனிதாபிமான உதவிகள் எதிர்காலத்திலும் தொடரும் என்று குறிப்பிட் டுள் ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவுக்கும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேனார்ட் குச்னருக்கும் இடையில் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து பிரான்ஸ் அரசாங்கத்தின் தள வைத்தியசாலை செட்டி குளத்தில் நிறுவப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(ஓ-6)


அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
THE REFUGEES REHABILTAION ORGANAISATION

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Computer Training Centre

◆Diploma in Office
◆Diploma in Desktop Publishing
◆Diploma in Type Setting

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

முயற்சி
தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| கணனி தட்டச்சு | -04 மாதங்கள் |
| தட்டச்சு (தமிழ்,ஆங்கிலம்) | - 04 மாதங்கள் |
| தையல் பயிற்சி | -04 மாதங்கள் |
| Saree Work, Painting & Saree blouse cutting | -02 மாதங்கள் |

குறுங்காலப் பயிற்சிநெறிகள்

குறிப்பு:-

◆ யாழ்ப்பாணம், இணுவில், கட்டுடை ஆகிய இடங்களில் பயிற்சி நெறிகள் நடைபெறும். கணனி பயிற்சிநெறி இணுவில் பயிற்சி நிலையத்தில் மட்டும் நடைபெறும்.

◆ விண்ணப்பப்படிவங்களை சுயமாக தயாரித்து 22.06.2009 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அந்தந்த நிலையங்களிற்கு சமுகம் அளிக்கவும்.

◆ வகுப்புகள் வாரநாள், வார இறுதிநாட்களில் நடைபெறும்.

◆ பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

◆ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிநெறிகள் நடைபெறும் இடங்கள்

| | | |
|---|---|---|
| தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,<br>106,4ஆம் குறுக்குத் தெரு,<br>யாழ்ப்பாணம். | தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,<br>M.C.Leod வைத்தியசாலை,<br>இணுவில். | தலைவர்,<br>அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,<br>கட்டுடை,<br>மானிப்பாய். |

(C-2574)


# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

ලංකා බැංකුව இலங்கை வங்கி

## கௌரவிப்பு விழா -13.06.2009

### கௌரவம் பெறும் க.பொ.த உயர்தர தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்கள்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி



என்.கேசாந் கலை -3A
எஸ்.ஜெயசாலினி கலை -3A
ரி.தனுராஜன் கலை -3A
எஸ்.கஜந்தன் கலை -3A




வி.இமயவல்லி கலை -3A
எம்.கோமதி கலை -3A
எஸ்.ஜனனி கலை -3A
சி.கோபிகா கலை -3A



வி.நியூறிசா கலை -3A
கே.பிரிவத்திகா கலை -3A
கே.பிரமிளா கலை -3A
ஜி.கஜலக்சன் உயிரியல் -2A,B




கே.பிரசன்னா கலை -2A,B
பி.சுலோசினா வர்த்தகம் -2A,B
எஸ்.யாழினி கலை -2A,B
எஸ்.கலையரசி கலை -2A,B



வி.பிருந்தா கலை -2A,B
ரி.யுகாசினி கலை -2A,B
எம்.சோபனா கலை -2A,B
பி.அகல்யா கலை -2A,B



என்.டிஜானி கலை -2A,B
ரி.கௌசிகா கலை -2A,B
எஸ்.கருணாவதி கலை -2A,B
எம்.பிரபாவதனி கலை -2A,B




எஸ்.அச்சுதன் கலை -2A,B
என்.இன்பராஜ் கலை -2A,B
ரி.நிதர்சன் கலை -2A,B
கே.இளங்குமரன் கலை -2A,B



பி.பபிரா கலை -2A,B
எஸ்.கஜலக்ஸ்மி கலை -2A,B
ஆர்.பிரபாகினி கலை -2A,B

இ.சிவகுணாளன் கணிதம் -2A,B
எஸ்.கஜினி கலை -2A,B
வி.நிரோஜினி கலை -2A,B
எஸ்.ஜீவிதா கலை -2A,B

## மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்




எஸ்.நிரோஜா கலை -3A
எஸ்.சரண்ஜா கலை -3A
ஈ.கௌதமி கலை -3A
ரி.குகேந்திரன் கலை -2A,B
பி.றதீஸ்குமார் கலை -2A,B
பி.ஜெனிற்றா கலை -2A,B




பி.ஜெயசாந்தினி கலை -2A,B
ரி.நிறோஜினி கலை -2A,B
எஸ்.துளசினி கலை -2A,B

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி



எம்.ஜனனி கலை -2A,B
ரி.துர்க்கா கலை -2A,B
எஸ்.துர்க்காஜினி கலை -2A,B

## சாவகச்சேரி மகளிர் கல்லூரி



எஸ்.அஜந்தினி கலை -3A
எஸ்.மேரிஸ்ரெலா கலை -3A
ரி.சஞ்சிதா கலை -3A
வி.பிரதீபா கலை -2A,B
பி.சர்வசொரூபி கலை -2A,B
ஜெ.சர்மிளா கலை -2A,B



கே.சிவதர்சிகா கலை -2A,B
கே.நாமகள் கலை -2A,B
பி.வினோதினி கலை -2A,B
பி.ஜனனி கலை -2A,B

## கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்



எஸ்.சுகந்தினி கலை -3A
கே.ஜெயலதா கலை -2A,B
எஸ்.ரஞ்சினிதேவி கலை -2A,B
வி.தனுஷா கலை -2A,B
வி.குமுதினி கலை -2A,B

## வரணி மகா வித்தியாலயம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கே.மேனகா<br>கலை -3A | ஆர்.கோமளா<br>கலை -3A | என்.சுமங்கலி<br>கலை -3A | எஸ்.காயத்திரி<br>கலை -3A | எஸ்.சாமினி<br>கலை -3A | கே.விஜயகாந்தன்<br>கலை -2A,B |

## சந்திரபுர ஸ்கந்தவரோதயா கல்லூரி



கே.றம்ஜா கலை -3A
ஏ.விஜிந்தா கலை -3A
எஸ்.நிஷானி கலை -3A
இ.டனுஜா கலை -2A,B

## உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்



ஏ.சசிரேகா கலை -3A
ஏ.சர்வதீபன் கலை -3A
இ.தனுர்சிகா கலை -2A,B
ரி.நவநிதி கலை -2A,B
எஸ்.சோபிதா கலை -2A,B



# கோடி அற்புதரான தூய அந்தோனியார்

## பாசையூர் தூய அந்தோனியாரின் பெருவிழா இன்று

கத்தோலிக்கத் திருச்சபையானது ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதம் 13 ஆம் திகதி "கோடி அற்புதர்" என்று அழைக்கப்படும் தூய அந்தோனியாரின் பெருவிழாவை பெருமகிழ்வோடு கொண்டாடுகின்றது. யாழ் நகரின் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள பாஷையூர் பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளி இன, மத வேறுபாடின்றி பக்தர்களுக்கு அற்புதங்களும் அருங்குறிகளும் செய்து வரும் புனித அந்தோனியாரின் பெருவிழா இன்று பெருமகிழ்வோடு கொண்டாடப்படுகிறது.

போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு தூய மரியன்னையின் விண்ணேற்பு தினமாகிய ஆவணி மாதம் 15 ஆம் திகதி புனித அந்தோனியார் பிறந்தார். அரச கோத்திரத்தைச் சார்ந்த புனித அந்தோனியாரின் குடும்பம் ஆழமான இறைவிசுவாசம் கொண்ட குடும்பமாக விளங்கியமையால் அக்கால வழக்கப்படி எட்டாவது நாளில் குழ்ந்தைக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டு "பேர்டினனட்" என்னும் பெயர் சூட்டப்பட்டது.

இவர் தன்னுடைய இறுதி நாட்களை இத்தாலி நாட்டின் பதுவை நகரில் செலவிட்டதாலும் இறைபதம் அடைந்த பின் இவரது உடல் பதுவை நகரில் நல்லடக்கம் செய்யப் பட்டதாலும் 'பதுவை அந்தோனியார்' என்று அழைக்கப்படுகிறார்.

1210 ஆம் ஆண்டு தன்னுடைய பதினைந்தாவது வயதில் அகுஸ்தீனார் துறவற சபையில் இணைந்து கொண்ட பேர்டினன்ட் இறை பணி ஆற்றுவதற்கு தன்னை அர்ப்பணம் செய்தார். பதினைந்து வயது அகவையை நிறைவு செய்ய முன் பேர்டினன்ட் பல புதுமைகளைச் செய்ததாக சான்றுகள் கூறுகின்றன. சலவைக் கல்லிலே சிலுவை வரைந்து சாத்தானை விரட்டியமை, உடைந்த குடத்தை மீள உருவாக்கியமை போன்ற அருங்குறிகளைக் குறிப்பிடலாம்.

இறைவனுடைய பணிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த பேர்டினன்ட் 1219 ஆம் வருடம் தன்னுடைய 24 ஆவது வயதில் இறைவனின் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார். இறைமகன் இயேசுவின் திருவுடலை தன்னுடைய கரத்திலே தாங்குவதை பெரும் பேறாக கருதினார்.

தான் தங்கியிருந்த குருமடத்தின் வாயிற் காப்பாளனாக பணியாற்றிக் கொண்டிருக்கும் போது புனித பிரான்சிஸ்கன் சபை துறவிகளை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட அச்சபையில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பி அச்சபையின் மேலாளரின் அனுமதியோடு தன்னை இணைத்துக் கொண்டு சபையின் ஒழுங்கின் பிரகாரம் தன்னுடைய பெயரை 'அந்தோனி' என மாற்றிக் கொண்டார்.

### புனித அந்தோனியாரின் மரணம்

புனித அசிசீயாரின் இறப்புக்குப் பின் இத்தாலிக்கு வரவழைக்கப்பட்ட புனித அந்தோனியார் தொடர்ந்து இறைவாக்குரைக்கும் பணியில் ஈடுபட்டார். 1231 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உணவறையில் உணவருந்திக் கொண்டிருந்த புனித அந்தோனியார் அசாதாரண நிலையில் காணப்பட்டார். திடீரென மயக்க முற்று சுய நினைவு இழந்தார்.

ஓரளவு உடல் நலம் தேறிய நிலையில் கண்களை ஏறெடுத்துப் பார்த்து 'ஆண்டவரை காணுகின்றேன்' என்று கூறிய புனித அந்தோனியார் ஒப்புரவு அருட்சாதனம், நோயிற்பூசுதல் அருட்சாதனம் பெற்றவராக யூன் பதின்மூன்றிலேயே தனது 36 ஆவது அகவையில் இறைபதம் அடைந்தார்.

யூன் பதினேழில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டு மரித்த ஒருவருடத்திற்குள்ளேயே 1232 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி பாப்பிறை 9 ஆம் கிறகோரியாரால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டு திருப்பீடங்களில் வணங்க தகுதி பெற்றார். 1946 ஆம் ஆண்டு திருத்தந்தை 12 ஆம் பத்திநாதர் அவர்கள் 'மறைவல்லுனர்' பட்டம் அளித்து இவரை பெருமைப்படுத்தினார்.

### இன்றும் அற்புதங்கள் செய்கிறார்.

இன்றும் கூட அந்தோனியார் பதியமர்ந்து ஆலயங்களை நாடி கத்தோலிக்கர் மட்டுமல்ல சமய வேறுபாடின்றி இந்துக்கள், முஸ்லீம்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் நாடி வந்து அவரிடம் மன்றாடி தமது குறைகள் நீங்கப் பெற்று மகிழ்வுறுவதை நாம் காணுகின்றோம். புனித அந்தோனியார் இவ்வுலகில் இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து மரணத்தின் பின்னும் விண்ணுலகில் இறைவனோடு இருப்பதே அவரிடம் காணப்படும் வல்லமைக்குக் காரணமாகும்.

இறைவார்த்தையை இறைஞானத்தின் துணை கொண்டு அறிவித்த புனித அந்தோனியாரின் 'நாக்கு' இன்றும் அழியாமல் இருப்பதும் திருச்சபையில் ஒரு புனித பண்டமாக பேணப்படுவதும் ஒரு மாபெரும் புதுமையாகும்.

**இ.அ.அமலரட்ணம்**
**பேராலயம்**

இன்று தேரேறி வந்து விசுவாசத்தோடு தன்னை நாடி வரும் பக்தர்களின் வேண்டுதல்களை கேட்டு குறைகளை நீக்கி அருள் வழங்கும் புனித அந்தோனியாரின் வாழ்வை நாம் பின்பற்றி வாழ முற்படுவோம். எமது நாடு அமைதி பெறவும் மக்கள் நிம்மதியாக வாழவும் வரம் வேண்டுவோம்.

# மனித கரத்துக்கு நிகராக செயற்படும் 'ரோபோ' கரம்




(டோக்கியோ) ஜப்பானில் டோக்கியோ நகரில் இடம் பெற்ற சர்வதேச உணவு இயந்திர மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சியில் ஒரு ரோபோ கரமானது கச்சிதமாக உணவுப் பொருட்களை கையாளுவதைப் படத்தில் காணலாம்.

இந்த ரோபோவின் மனிதருக்குள்ளதை ஒத்த விரல்கள் அதனது கரத்தின் மேற்பரப்பிலான அழுத்தத்தை கிரகித்து அதற்கேற்ப செயற்கைப் பொருத்துகளைப் பயன்படுத்தி அசையும் ஆற்றலைக் கொண்டுள்ளன. (ஓ-6)


## தசாக வீட்டுக் கிருத்திய அழைப்பு

கடந்த 01.06.2009 திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது தந்தையார்



### அமரர் து.சிவசிதம்பரதேசிகர்

அவர்களின் தசாகக் கிரியைகள் 11.06.2009 நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 14.06.2009 ஞாயிற்றுக்கிழமை நிகழவுள்ளன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு எமது தந்தையாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

சச்சிதானந்தம்,
சகோதரர்கள்.

(C-2526/ இ-22)


# மனிதர்களின் எண்ணப் போக்கை அறியும் ஆற்றலுடைய 'ரோபோ'

## ஐரோப்பிய விஞ்ஞானிகளால் உருவாக்கம்

மனிதர்களின் எண்ணப் போக்கை முன்கூட்டியே ஊகித்து அறியக் கூடிய ரோபோ ஒன்றை ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி யுதவியுடன் முன்னெடுக்கப்பட்ட 'ஜாஸ்ட்' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'ரோபோ' நிபுணர்கள், மனோவியலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய துறைகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஒன்றிணைந்து இந்த அபூர்வ ரோபோவை வடிவமைத்துள்ளனர்.



சிந்திக்கும் ஆற்றலற்ற பணியாளர்களாக செயற்படும் வழமையான இயந்திரத் தன்மையான ரோபோக்களுக்குப் பதிலாக, மனிதனை யொத்த சிந்திக்கும் ஆற்றலையும் முடிவெடுக்கும் சிந்தனையும் கொண்ட ரோபோவை உருவாக்கும் முயற்சியின் ஒரு கட்டமாக இந்த 'ரோபோ' வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த ரோபோ மனிதர்களின் தேவைகளையும் மனோபாவங்களையும் அறிய கேள்விகளை வினவக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், மனிதர்களுடன் இணைந்து பொதுவான இலட்சியத்தை அடைய சுயமாகப் பாடுபடக் கூடிய வகையில் உன்னத செயலாற்றல் கொண்ட ரோபோக்களை வடிவமைப்பதற்கான இலக்கில் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (ஓ-6)

## ஐ.நா. பொதுச் சபையின் புதிய தலைவர் தெரிவு

ஐக்கிய நாடுகள் பொது சபையின் தலைவராக லிபிய அரசியல்வாதியான அலி அப்டெஸ்லாம் தரேகி தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

இந்தப் பதவி ஒரு வருட காலத்துக்கு பிராந்திய அடிப்படையில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்க ஒன்றிய விவகாரங்களுக்கான லிபிய அமைச்சரான தரேகி, எதிர்வரும் செப்டெம்பர் மாத மத்தியில் தனது பதவியை பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் ரோமன் கத்தோலிக்க மத குருவும் முன்னாள் நிக்கரகுவா வெளிநாட்டு அமைச்சருமான டிஸ்கொடோ புரொக்மானின் இடத்திற்கு நியமிக்கப்படவுள்ளார். (ஓ-6)

## இரசாயன அட்டவணையில் இணையும் புதிய மூலகம்

112 ஆவது இடத்தில் புதிய அதிபார மூலகமொன்று விரைவில் இடம் பிடிக்கவுள்ளது. ஜேர்மனியைச் சேர்ந்த குழுவினரால் கண்டு பிடிக்கப்பட்ட இந்த மூலகம் தொடர்பான ஆராய்ச்சிகள் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக மேற்கொள்ளப்பட்டன.

கன அயன் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான சிகர்ட் ஹொப்மான் தலைமையிலான குழுவினரால் கண்டறியப்பட்ட இம் மூலகத்தை இரசாயன மூலக அட்டவணையில் சேர்ப்பதற்கு முன் அதற்கொரு பெயரைச் சூட்ட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாக உலோகம் மற்றும் ஈய உலோகம் என்பவற்றுக்கு இடையிலான தாக்கத்தின் மூலம் இந்த புதிய மூலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய மிகவும் பெரிதானதும் கனமானதுமான அணுக்கள் உறுதித்தன்மை குறைவானவையாக உள்ளதாகத் தெரிவித்த விஞ்ஞானிகள் அம்மூலகம் உருவாக்கப்பட்டு ஒரு சில மில்லி செக்கன்களில் அழிவடைந்து விடுவதாக கூறுகின்றனர். (ஓ-6)

## ஆங்கில மொழியின் 1,000,000 ஆவது சொல்

ஆங்கில மொழியில் மில்லியனாவது சொல் இணையும் முக்கியத்துவ நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதன் பிரகாரம் வெப் 2.0 (WEB 2.0) என்ற சொல் ஆங்கில மொழியில் மில்லியனாவது சொல்லாக இடம்பெறும் பெருமையைப் பெற்றுள்ளது.

வெப் 2.0 என்பது அடுத்த தலைமுறை வெப்தள உற்பத்திகளைக் குறிக்கும் சொல்லாகும். (ஓ-6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 8-V

களைகளுள் ஒரு வித்திலை, இருவித்திலை மற்றும் பூக்காத பன்னத்தாவரங்கள் என்பன அடங்கும். இருவித்திலை களைகளை ஒடுங்கிய இலை மற்றும் விரிந்த இலைக் களைகளெனவும் பாகுபடுத்துவார்கள்.

களைகளை எவ்வாறு பாகுபடுத்தினாலும் அவற்றினது கட்டுப்பாடு என்பது வேளாண் செய்கையின் முக்கியத்துவத்திலேயே தங்கியிருக்கின்றது. சாதாரணமான வேளாண் செய்கையில் தேவை கருதியதாக களைக் கட்டுப்பாடு முழுவதுமாகவோ அன்றி முடிந்தவரைக்கும் களைகளை கட்டுப்படுத்துவதையோ மையப்படுத்தி நடாத்தப்படும். ஆனால் விதை உற்பத்தி அல்லது விதைக்காக செய்யப்படும் வேளாண்செய்கையில் களைக்கட்டுப்பாடு முழுமையாக இருக்க வேண்டும். விதை உற்பத்தி என விளையாட்டாக வேளாண்செய்கையை செய்யமுடியாது. ஏனெனில் இங்கு களைகளினூடாகவே பல நோய்களின் வித்திகள் பரவக்கூடிய வாய்ப்புக்களுண்டு. குறிப்பிட்ட சில களைகளின் பிரசன்னத்தால் பயிரில் அதிகம் சேதமேற்படும் உதாரணங்களுமுண்டு.

### ஒரு வித்திலை களைகள்

சென்ற வாரங்களில் குறிப்பிட்ட ஒருவித்திலை களைகளுள் அறுகு,கோரை என்பன பற்றி அவற்றின் மகிமை பற்றியும் விளக்கியிருந்தேன். அதிலும் ஏனைய களைகளை விட ஒருவித்திலை களைகளினாலான பாதிப்பு அதிகமென்றே குறிப்பிடலாம். நிலத்திற்கு கீழ் கிழங்குவலைப்பின்னலைகொண்ட கோரையை முழுவதுமாக இல்லா தொழிப்பதென்பது நிறைந்த செலவுக்குரிய ஒரு களையகற்றல் செயற்பாடு ஆகும்.

கோரையினால் நிலத்தின் கீழாக உருவாக்கப்படும் அதற்குரிய உணவு சேமிக்கும் அறையாக நிலக்கீழ் கிழங்குகள் தொழிற்படும். அதுவும் ஒன்று இரண்டு கிழங்குகளல்ல. ஒரு வலைப்பின்னல் அமைப்பாக பல கிழங்குகள் இணைக்கப்பட்டிருக்கும். இக்கோரையை அதனுடைய கிழங்குடன் சேர்த்து அகற்றினால் மட்டுமே ஓரளவிற்கு கிடைக்கும் உணவை இடை நிறுத்தி கோரையின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தலாம்.

### ஆடி உழவு

ஆடி உழவு என முன்பு விவசாயிகள் கிடைத்த ஒரு மழையுடன் அல்லது புழுதி உழவு என்பதற்கிணங்க சற்று ஆழமாக உழுது கோரை கிழங்குடன் சேர்த்து எடுத்து விடுவார்கள். புழுதி உழவில் கோரையை அரித்து எடுப்பார்கள். கோடை உழவின் போது கோரை பூத்திருக்காது. அவ்வேளையில் இக்களையை முழுமையாக அகற்றி விடுவது புத்திசாதுரியமான செயலாகும். இந் நேரத்தில் கிழங்குகளின் பெருக்கமும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். சிறந்ததொரு கட்டுப்பாட்டை மேற்கொள்ளவும் முடியும். எங்களூர் கமக்காரர்களுக்கு இந்த வித்தை நன்றாகவே தெரியும். ஆனால் அவர்களுக்கிருக்கும் இடர்ப்பாடுகளால் முழுமையாக இதனை கட்டுப்படுத்த முடிவதில்லை. கோரையை கிழங்கோடு அரித்தெடுத்தால் அதனை சுதேச வைத்தியத்திற்கு மருந்தாக கொடுத்து விடலாம். இங்கே வேளாண்மைக்கும் சுதேச வைத்தியத்திற்குமான பாலமாக இந்த களை -மூலிகை விடயம்




அமைந்து விடுகின்றது. சுத்தமான சிறந்த கோரைக்கிழங்கை சுதேச வைத்தியர்களுக்கு இந்த பாலத்தினூடாக வழங்க முடியுமல்லவா? இதை யார் செய்வது?

### இருவித்திலை களைகள்



இருவித்திலை கொண்ட களைகளின் போட்டி அநேகமான பயிர்களுக்கு வெறுமனே இடத்தையோ அல்லது பயிருக்கு தேவையான ஊட்டச்சத்தை பகிர்ந்தெடுப்பதோடு மட்டுமல்லாது அதற்கு மேலும் பூச்சி பீடைகள்,நோய்கள் மற்றும் சிற்றுண்ணிகள் என்பனவற்றின் காவிகளாக தொழிற்படுகின்றன. மாறாக அநேகமான பூச்சி பீடைகளினதும் நோய்களினதும் மாற்று விருந்து வழங்கிகளாக (Alternate Hosts) தொழிற்படுவதனால் பயிர்களற்ற காலங்களில் இப்பூச்சிப் பீடைகளும் நோய்களும் களைகளில் பல்கிப் பெருகி பின் பயிர் விளைவிக்கும் போது இலகுவாக பயிர்களுக்கு தொற்று ஏற்பட வாய்ப்பாகி விடுகின்றது. இரு வித்திலை களைகளுள் ஒடுங்கிய மற்றும் அகன்ற இலைகளைகள் இருக்கின்றன. இக்களைகளை கட்டுப்படுத்துவதற்கு களை நாசினிகள் பெரிதும் பயன்படுத்தப்படும் இவ்வேளைகளில் இனியொரு பசுமைப் புரட்சியில் பயன்படுத்தும் களைநாசினிகளின் அளவைக் குறைத்து வேறு வழிகள் மூலம் களைகளை முகாமைப்படுத்த முயலுதல் வேண்டும்.

### கோவாப் பயிருக்கு தயிர்வளை எனும் களை எமன்

கோவா பயிர்ச் செய்கையிலீடுபடும் விவசாயிகள் அந்த விளை நிலத்தில் தயிர் வளை என்னும் களை அறவே இருக்காது இருக்க பார்த்துக் கொள்ள வேண்டும். கோவா நாற்றுக்களில் முதல் 1 1/2 மாதம் வரையில் இலையரிவண்டு (Fiea beetle) இனது தாக்கம் அதிகரித்து காணப்படுவதுடன் ஆரம்ப கால கோவா நாற்றுக்களில் அதிக சேதத்தையும் ஏற்படுத்தி விடும். இவ்வகை இலையரி வண்டினது தாக்கம் கோவாப் பயிரின் 1 1/2 மாதம் வரையுமே அதிகமானதாகக் காணப்படும். அதன் பின்னர் இலையரி வண்டினது சேதம் அதிகமானதாகக் காணப்படாது. ஆக ஆரம்ப காலத்தில் அதுவும் கோவா சிறிய பயிராக இருக்கும் போது மட்டுமே இவ் இலையரி வண்டுகளின் தாக்கம் அதிகரித்திருக்கும். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் இவ் இலையரி வண்டுகளில் நிறைவுடலி மட்டும் கோவா இலைகளை தாக்கி சேதத்தை ஏற்படுத்தும். ஏனைய பருவங்கள் தயிர்வளை (Gynantropis) எனும் இருவித்திலை களையில் வாழுவது தான். இங்கே தயிர்வளை மற்றும் நாய்க்கடுகு ஆகிய களைகளை முழுமையாக அகற்றி விட்டால் கோவாப் பயிரில் சேதத்தை விளைவிக்கும் இவ் விலையரி வண்டுகளின் தாக்கத்தை இலகு வாக தவிர்த்துவிடலாம்.

இங்கே முழுமையான களைக்கட்டுப்பாடு பூச்சித் தாக்கத்தை தவிர்க்க உதவுகின்றதல்லவா. இது போன்று பல உதாரணங்களுண்டு.

களைக்கட்டுப்பாடு சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டால் பூச்சி,சிற்றுண்ணி மற்றும் நோய்த்தாக்கங்களிலிருந்து பயிர்களை காப்பாற்றவது மிகவும் சுலபமானதாகும்.

இங்கே ஒரே குடும்பத்தைச் சேர்ந்ததாக பயிரும் களையும் இருக்கும் போது பூச்சித் தாக்கம் அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு அதிகமாகவே இருக்கம்.

களைகளை முகாமைத்துவப்படுத்தும் போது இதனை ஓரளவிற்கேனும் கவனத்திற் கொள்ளுதல் நன்று. இனியொரு பசுமைப் புரட்சியில் வெறுமனே இரசாயன



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

களைகொல்லிகளை பயன்படுத்துவதனை தவிர்த்து சேதன விவசாயமும் உயிரியல் தொழில் நுட்பமும் இணைந்த பசுமைப் புரட்சியை நோக்கியதாக எமது வேளாண் செய்கை அமைய வேண்டும்.

குறிப்பாக வளர்முக நாடுகளில் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதை நோக்காகக் கொண்டு தேவையற்ற சூழலை மாசுபடவைக்கும் எந்த தொழில் நுட்பத்தையும் உள்வாங்குவதை தவிர்த்து எமது வளங்களை சிறப்பாக பயன்படுத்தி எளிய முறையில் உள்ளூர் தொழில் நுட்பங்களை வடிவமைத்து களை முகாமைத்துவமுட்பட பீடை முகாமைத்துவமும் செயற்படுத்தப்படல் வேண்டும்.

வளர்ந்த நாடுகளின் கைகளை இனியும் பார்த்து ஏங்கும் காலம் மாறிடவேண்டும். எமக்கு ஏற்புடையதான இலகுமுறை எளிய தொழில்நுட்பங்களை நாமே வடிவமைக்க நிறைந்த ஆராய்சி இங்கே அவசியம். சிறிய வயற்பரப்பைக் கொண்ட எமது விவசாயிகள் பயன்படுத்தக் கூடியதாக வேளாண்செய்கையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இங்கே "உணவே மருந்து " என்பதும் "மருந்தே உணவு" என்பதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இயற்கை வழி விவசாயத்தில் நம்பி கால்களை வைத்து எங்களூர் விவசாயத்தை எமது வளங்களின் அதியுச்ச பயன் பாட்டினூடு நாமே கட்டியெழுப்ப அனைவரும் முன் வருவீர்களானால் இன்னொரு பசுமைப்புரட்சியில் மேற்கூறிய அனைத்தையும் உள்ளடக்கி எப்பொழுதும் பசுமையான புரட்சியா கவே (Evergreen Revolution) மாற்றிக் காட்டலாம். இனிவரும் தொடரில் இவைபற்றி பார்க்கலாம்.

(தொடரும்)

## மலேசிய பிரஜைகள் இருவர் வெள்ளவத்தையில் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை 37 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த மலேசிய பிரஜைகள் இருவர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய படங்கள், தகவல்கள் உள்ளடங்கிய பென் ட்ரைவ் ஒன்று மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் குறித்த நபர்கள் இலங்கைக்கு வருகை தந்து மேற்படி விடுதியிலேயே தங்கியிருந்ததாக வெள்ளவத்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றை அடுத்து புதன்கிழமை பிற்பகல் அங்கு சென்ற பொலிஸ் விஷேட குழுவொன்று அவர்களைக் கைது செய்துள்ளது.

அத்துடன் அவர்கள் தங்கியிருந்த அறையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே புலிகள் தொடர்பாக அவர்கள் வைத்திருந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தற்போது வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்கள் இலங்கைக்கு வருகை தந்ததற்கான நோக்கம் குறித்த தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்புட்டு வருகின்றன என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-6)

## தொழிலாளர்களைப் பாதுகாக்க புதிய சட்டமூலம்

தொழில் புரியும் அனைத்து மக்களினதும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்கான புதிய சட்டமூலம் ஒன்றை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சர் அதாவது செனவிரத்ன கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவன சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

1942 இல் நிறைவேற்றப்பட்ட தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் மூலம் தொழில் புரிகின்ற 25 இலட்சம் பேர் பயன்பெறுகின்றனர். எனினும் உத்தேச புதிய சட்ட மூலத்தின் ஊடாக நாட்டில் தொழில் புரிகின்ற 80 முதல் 90 இலட்சம் பேர் நன்மை அடைவர் என அமைச்சர் மேலும் கூறினார். (ஓ-6)

## கடலோர பாதுகாப்பு திணைக்களத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கைக்கு அண்மையிலுள்ள கடற்பரப்பில் நிலவுகின்ற பல்வேறுபட்ட குற்றச் செயல்களை தடுப்பதற்கான கடலோர பாதுகாப்பு திணைக்களத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் அதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு முடிபுகளை அறிவிக்கும் போதே மேற்கண்ட தீர்மானத்தை தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாதுகாப்பு அமைச்சின் கீழ் கடலோர பாதுகாப்பு திணைக்களத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது இதன் மூலமாக இலங்கைக்கு சொந்தமான 400 கடல் மைல் தூரத்தில் கடற்கொள்ளை, போதைப் பொருள் கடத்தல், ஆயுத வியாபாரம் உள்ளிட்ட சட்ட விரோதமான நடவடிக்கைகளை தடுக்க முடியும். (ஓ-6)

## வடக்கின் மனிதாபிமானப் பணிகளுக்கு மியன்மார் 5.5 மில். ரூபா நிதியுதவி

(கொழும்பு)

வட பகுதி மக்கள் தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் மனிதாபிமானப் பணிகளுக்கு மியன்மார் அரசு 5.5 மில்லியன் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்தப் பணத்தை மியன்மார் வெளிநாட்டமைச்சர் நயன் வின் தனது அமைச்சில் வைத்து அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் நிவ்டன் குணரத்னவிடம் கையளித்தார்.

இந்தப் பணம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

உங்களுக்கு தோல்விகிட்டும் போது ஏமாற்றம் ஏற்படலாம். ஆனால்,நீங்கள் முயற்சி செய்யாவிட்டால் உங்களுக்கு பெரிய அழிவே ஏற்படும்.

-பெவரி வில்ஸ்

வலம்புரி

# தமிழ்க் கூட்டமைப்பினரின் வேகம் தமிழரின் வெந்த மனங்களை ஆறுதல்படுத்தாது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியா சென்று இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா,வெளியுறவு செயலாளர் சிவ் சங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

13ஆவது அரசியல் திருத்தத்தை தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது கூட்டமைப்பின் கருத்தாக இருந்தது.

இதற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா என்ன பதில் அளித்தார் என்பது தெரியாத விடயமாயினும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தை விபரங்களை மறைத்து வருகிறது.

இந்த மறைப்பு தமிழினத்தின் நன்மை கருதியதென்றால் அடடா,நல்லவிடயம் என்று பேசாமல் இருந்து விடலாம். ஆனால் அதுதான் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஒற்றுமையும்,சரியாகவும் விரைவாகவும் தீர்மானம் எடுக்கும் ஆற்றலும் இல்லை.

இதனால் தங்கள் சகபாடிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக சந்தித்தவர்கள் அந்த சந்திப்புத் தொடர்பில் எதுவுமே கதைப்பதில்லை.

இத்தகைய நிலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் மனங்களை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஈழத்தமிழர்களை பொறுத்தவரை அவர்கள் தமக்கான தலைமை குறித்த வினாவை உள்ளூர எழுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இருபத்திரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்துணை வேகமாக செயற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் பலமற்றவர்களாக-வேகம் இழந்தவர்களாக உள்ளனர் என்பது மக்களின் பொதுவான கருத்து-நினைப்பு.

ஐ.நா. செயலாளர் பான்கீ மூன் இலங்கைக்கு வந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை சந்திக்கவேயில்லை.

சந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை அரசு தரவில்லை என்பதுடன் கூட்டமைப்பு தனது முயற்சியை முடித்துக் கொண்டது.

இலங்கையில் சந்திக்க முடியவில்லையாயின் ஜெனிவாவுக்கு விரைய வேண்டாமா?

எதிலும் அசமந்தப் போக்கு. இதுவே எங்கள் அவல நிலைக்கு காரணம் என்பது உணர்தற்குரியது.

# வடக்கில் ஸ்தம்பிதமடைந்துள்ள தொலைத்தொடர்பு சேவைகளை மீளக் கட்டியெழுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் ஸ்தம்பிதமடைந்துள்ள நிலையிலுள்ள தொலைபேசி மற்றும் ஏனைய தொலைத் தொடர்பாடல் சேவைகளைக் கட்டியெழுப்ப தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தற்காலிக மற்றும் நீண்ட கால வேலைத் திட்டத்தின் விவகாரம் தொலைபேசி வசதிகள் மற்றும் இணையத்தள வசதிகளை வடமாகாண மக்களுக்கு பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தற்காலிக வேலைத் திட்டத்தின்படி இவ்வருடத்திற்குள் வடக்குக்கு அவசியப்பட்ட சீ.டி.எம்.ஏ. தொலைபேசி வசதியை பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் தற்போதும் யாழ்ப்பாணம் மற்றும் செட்டிகுளம் மெனிக்பாம் புனர்வாழ்வு நிலையங்களுக்கென சீ.டி.எம்.ஏ. தொலைபேசி வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் வடக்கின் தொலைத் தொடர்பாடல் வசதிகளை மேற்கொள்வதற்காக இவ்வருடத்துக்கென 300 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (6)

# அம்பாந்தோட்டை துறைமுகப் பணிகளை சீனா விரைவுபடுத்தி வருகின்றது

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சீனா அமைத்துவரும் துறைமுகப் பணிகளை விரைவுபடுத்த சீனா அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சீனா அமைத்துவரும் துறைமுகப் பணிகளை விரைவுபடுத்த சீன அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கையுடன் அனைத்துலக சமூகம் பகைமை கொண்டுள்ளது எனக் கூறுவது கனவு. சீனாவும், ஜப்பானும் இலங்கையில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இலங்கையில் சீனா மூன்று பாரிய திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. நுரைச்சோலையில் அமைக்கப்படும் அனல் மின் நிலையமும் சீனாவின் முதலீடாகும்.

ஜப்பான் பல பாரிய பாலங்களை நிர்மானித்து வருகின்றது. அது அனுராதபுர மருத்துவமனையையும் தரமுயர்த்தி வருகின்றது.

ஜிஎஸ்பி வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நீடித்தால் இலங்கையில் இருந்து 7 ஆயிரத்து 100 பொருட்களை 27 ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுகூலமாக இருக்கும்.

எனினும் அதனை நீடிப்பதற்கு இலங்கை தனது இறைமையை இழக்காது இருந்தபோதும் நாம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம்.

அனைத்துலக நாணய நிதியம் தொழில்நுட்ப காரணிகளை கருத்திற் கொண்டு 1.9 பில்லியன் டொலர் கடன் தொகையை வழங்கும் என நாம் நம்புகின்றோம். அவர்கள் அரசியல் காரணிகளை கருத்தில் கொள்ளக்கூடாது. இலங்கை இந்த கடனை பெறுவதற்கு தகுதி உள்ள நாடு என்றார் அவர். (6)

# இடம்பெயர்ந்த சிறுவர்களைத் தங்க வைக்க புதிய கட்டிடம்!

(கொழும்பு)

கிளிநொச்சியிலுள்ள சிறுவர் இல்லத்தில் இருக்கும் 349 இடம் பெயர்ந்த சிறுவர்களைத் தங்க வைப்பதற்காக வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறுவர் இல்ல கட்டிடம் எதிர்வரும் 15ஆம் திகதி திறந்து வைக்கப்படுமென சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் அமைச்சர் சுமேதா ஜீ.ஜயசேன தெரிவித்தார்.

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற அமைச்சரவை.முடிபுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் சுமார் 50 ஆயிரம் சிறுவர்கள் காணப்படுகிறார்கள். இவர்களுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெற்றோரை இழந்த சுமார் 850 சிறுவர்கள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்தச் சிறுவர்கள் வழங்கிய தகவல்களைக் கொண்டு அவர்களின் பெற்றோரைக் கண்டுபிடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார். (ஓ-6)

# காணாமல் போயுள்ள மூன்று வைத்தியர்களையும் மீட்க உதவுமாறு அவுஸ்திரேலிய அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் இருந்து வவுனியாவிற்கு இடம்பெயர்ந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள அல்லது காணாமல் போயுள்ள மூன்று வைத்தியர்களின் விடயத்தில் தலையிட வேண்டும் என அவுஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரப்பட்டுள்ளது.

சர்வதேச வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி பிரைன் மோட்டன் இந்த கோரிக்கை தொடர்பில் அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

கிளிநொச்சி பிராந்திய வைத்திய அதிகாரி தங்கமுத்து சத்திய மூர்த்தி, வைத்திய கலாநிதி துரைராஜா வரதராஜா முல்லைத்தீவு சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி வீ. சண்முகராஜா ஆகியோர் தொடர்பிலேயே இந்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமக்கு கிடைத்த தகவலின் படி வைத்தியர்களான சண்முகராஜாவும் சத்திய மூர்த்தியும் பயங்கரவாத தடுப்பு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும்,வைத்திய கலாநிதி வரதராஜா படுகாயமடைந்த நிலையில் எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்பது தெரியவில்லை எனவும் பிரைன் மோட்டன் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை காப்பாற்றுவதற்காக தமது பாதுகாப்பை அவர்கள் மூவரும் கருத்திற் கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஓ-6)

# அவுஸ்திரேலியாவில் கல்விபயிலும் மாணவர்கள் மீதும் தாக்குதல்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்கள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கன்பரா பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மூன்று மாணவர்கள் தங்கியிருந்த வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த மூன்று மாணவர்களும் தங்கியிருந்த வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் தாக்குதல் காரணமாக சேதமடைந்துள்ளது.

இனவாத கோசங்களை எழுப்பிய சிலரே இவ்வாறு தாக்குதலை நடத்தியதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளார். அண்மைக்காலமாக ஆசிய மாணவர்கள் மீது குறிப்பாக இந்திய இலங்கை மாணவர்கள் மீது இனவாத அடிப்படையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## எங்கள் குலம் காப்பவளே! ஏற்றுந்தன் கொடியை

இன்று வண்ணார்பண்ணை
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளியம்பாள் கொடியேற்றம்

தங்க நிறச் சுந்தரியே கொடியேற்று
தமிழ் விஞ்சும் அம்பிகையே கொடியேற்று
எங்கள் குலம் காப்பவளே கொடியேற்று
எழில் வண்ணை உறைபவளே கொடியேற்று
பொங்கும் துயர் தீர்ப்பவளே கொடியேற்று
புவனமதைக் காத்தருள கொடியேற்று
சிங்கமதில் எழுந்தருளிக் கொடியேற்று
சீரோங்கும் வண்ணைத் திருப்பதியில் கொடியேற்று

மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன்

# சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு நம்பிக்கை




செல்வந்தர்களை நம்பாதே, வாழ்வதை விட அவர்கள் இறந்தவர்களே. பணிவும் தாழ்மையும் அத்தோடு நன்றியும் உடைய நீங்களே நம்பிக்கைக்குரியவர்கள். இறைவனிடம் நம்பிக்கை கொள்க. உண்மையான மனிதன் ஒருவனை எனக்கு அளியுங்கள் ; மதம் மாறினவர்களின் கூட்டம் எனக்குத் தேவையில்லை, யாருடைய துணையையும் பொருட்படுத்தாதீர்கள். மனிதத் துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவன் அல்லவா? தூய்மை பெறுக. இறைவனிடம் நம்பிக்கை கொள்க. அவனையே எப்போதும் சார்ந்து நில். அப்போது நன்னெறியில் செல்வீர்கள்; எதனாலும் உங்களை வெல்ல முடியாது.

உங்களில் ஒவ்வொருவரும் பேராற்றல் படைத்தவராக வேண்டும். இது நிச்சயம் முடியும் என்றே நான் கூறுகின்றேன். கீழ்ப்படி[illegible] துணிவு, எடுத்த செயலில் விருப்பம் இம் மூன்றும் உங்களிடம் இருந்தால் எதுவும் [illegible]ங்களைத் தடை செய்யாது.

# உயிர் காக்கும் உன்னத பணி

தரணியில் தானா[illegible]ங்களில் சிறந்தது இரத்த தானம். இவ்வுயரிய[illegible] தர்மத்தை தற்செயலான ஒரு செயற்பாடாச[illegible]க் கருதாது சுயகௌரவத் திற்காகவோ வி[illegible]ளம்பரத்திற்காகவோ அன்றி தமது சமூகக் [illegible] கடப்பாடாக எண்ணி தம்மை இணைத்துக் [illegible] கொண்ட குருதிக்கொடையாளர் கள் போற்ற[illegible]பட வேண்டியவர்கள். மண்ணில் மதிக்கப்ப[illegible]ட வேண்டியவர்கள். அவர்கள் சேவையி[illegible]னை இந்நாளிலே நினைவுகூர்வது ஒவ்வொ[illegible]ரு பிரஜையினதும் கடப்பாடாகும்.



குருதி ஓர் உயிர் காக்கும் உன்னதமான பொருள். மருத்துவத்துறையில் அதீத விஞ் ஞான வளர்ச்சி ஏற்பட்டும் குருதிக்கு மாற்றீடாக செயற்கையாக ஒன்றைத் தயாரிக்க முடியா துள்ளது. குருதிக்கு மாற்றீடு குருதியே.

முடியும். எனவே தொடர்ச்சியாக இரத்த தானம் செய்தும் இவர்களைக் காப்பாற்ற வேண்டி யது எமது கடமையல்லவா.

புற்றுநோய்க்கு அளிக்கும் சிகிச்சையின் போதும் குருதிக் கலங்களின் உற்பத்திக் குறை வடைவதனால் பெரும்பாலானவர்களுக்கும் குருதி தேவைப்படுகின்றது. இத்தேவையை சரியான முறையில் பூர்த்தி செய்யாவிட்டால் அவர்களின் இறப்பு தவிர்க்க முடியாததொன் றாகிவிடும். இவர்க்களைப் காப்பாற்ற வேண் டியது எமது சமூகப் பொறுப்பல்ல வா?

குருதிச் சோகையுள்ளவர்க ளுக்கு உரிய நேரத்தில் தேவை யானளவு குருதி வழங்கி குணமாக் காது விட்டால் இந் நோயாளர்கள் நிரந்தர இதய நோய் உடையவர் களாவதுடன் வாழ்க்கை பூராகவும் தொழில் எதுவும் செய்ய முடியாமல் அவஸ்தைப்படுவதுடன் ஏனை யோரில் தங்கி வாழவும் வேண்டி யேற்படும்.

இது அவர்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் ஓர் சுமையாக அமையலாம். எனவே எமது குருதியின் சிறு பகுதியை தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் இந் நோயாளர்களின் நோயை குணமாக்கி அவர்களின் எதிர்கா லத்தை ஒளிமயமாக்குவோம்.

குருதியானது ஓர் குறிப்பிட்ட கால எல் லைக்குள் மட்டுமே சேமித்து வைக்கக், கூடியது. எனவே போதியளவு குருதியின்

**நாளை யூன் 14ஆம் திகதி ஒரு சிறப்பான நன்னாள். குருதிக்கொடை மூலம் உயிர்காக்கும் உன்னதபணியினை மதிக்கும் நாள். தொடர்ந்து எம் ஆயுள் வரை இவ் உயிர் காக்கும் பணியினை செவ்வனே செய்வோம் என உறுதியெடுக்கும் நாள்.**

ஆகவே எவரேனும் ஒருவர் இன்னொருவரின் உயிரை தன் கண் முன்னே காப்பாற்ற கொடுக் கும் ஓர் உயரிய உன்னத பரிசு குருதியே.

ஒருவரின் உடலில் இருந்து மொத்தக் குருதியில் 20%க்கும் அதிகமான குருதி சடுதி யாக வெளியேறுமாயின் அது மரணத்துக்கே இட்டுச் செல்லும். இவ்வாறான பாரிய குருதி இழப்புகள், வீதி விபத்துகள், பிரசவ காலத்தில் ஏற்படும் குருதி இழப்புகள், யுத்தகாலத்தில் ஏற்படும் காயங்கள் மூலம் ஏற்படுகின்றன. இவை பொதுவாக இளம்பிரயாத்தினரது உயிர்களையே பறிக்கின்றது.

இவ்வாறான இழப்புக்களை இரத்த இருப்பை உறுதிசெய்வதன் மூலம் தடுக்க கையிருப்பை எந்த நேரத்திலும் எவ்விடத் திலும் உறுதி செய்வ தற்கு உரிய வகையில் ஆரோக்கியமுள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள் குறித்த கால இடைவெளி யில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்ய வேண்டிய தேவைப் பாடுள்ளது.

பாரதூரமான நோய்களற்ற 50 கிலோ கிராம் உடல் நிறையிலும் கூடிய 18 தொடக் கம் 60 வயதிற்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் 4மாதத்திற்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம்.


ஒருவர் குருதி வழங்க முன்பு அவரிடம் சில கேள்விகள் கேட்பது வழக்கம். இதன் மூலம் அந் நபரின் மருத்துவநிலை, தற்போ தைய ஆரோக்கியம், வாழ்க்கை முறை என்பன அறியப்படுகின்றன. இக் கேள்விகளி னால் இரத்தம் கொடுப்பவர்கள் மட்டுமல்ல பெறுபவர்களும் நன்மையடைகின்றனர்.

இக் கேள்விகளிற்கு உண்மையான பதிலை வழங்குவதன்மூலம் குருதியின் மூலம் குருதியின் மூலம் பரவும் நோய் ளைத் தடுக்கமுடியும். அத்துடன் இப் பதில்கள் மருத் துவ மரபிற்கமைய இரகசியமாகவும் பேணப் படும். எனவே ஒழிவு மறைவின்றி உரிய உத்தியோகத்தரிடம் தெளிவான பதில்களைக் கூறவேண்டிய கடமைப்பாடுள்ளது.

பின்னர் குருதிக் கொடையாளர் மருத்து வப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவார்.

இதன்மூலம் ஒருவர் முதன்முதலாகவோ

# இரத்ததானம்



அல்லது தொடர்ச்சியாகவோ இரத்ததானம் செய்ய வரும்போது அவர்களுக்கு எதுவித பாதகமான விடயங்களும் ஏற்படாமலிருப் பதை இரத்தவங்கி உறுதி செய்துகொள் கின்றது.

இதன்பின் குருதி பெறப்படும் பகுதி சுத்தம் செய்யப்பட்டு, கிருமி தொற்றற்ற ஊசிமூலம் பைகளில் குருதி சேகரிக்கப்படும். இதற்கு 10 நிமிடங்கள் மட்டும் தேவைப்படுகின்றது. பொதுவாக ஒருவரில் ஒரு தடவை 450 மில்லிலீற்றர் குருதி மட்டுமே பெறப்படுகின் றது. இது அவரின் உடலிலுள்ள குருதியில் 1/10 பங்காகும். குருதி வழங்கிய பின் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் ஓய்வெடுக்க வேண்டும். இதன்போது பானங்கள் பருகி சிற்றுண்டிகள் உண்ணலாம்.

பின்னர் கொடையாளி அன்று மட்டும் பாரிய கடின வேலைகள் தவிர்ந்த சாதாரண வேலைகளில் ஈடுபடலாம். அடுத்த வரும் 24 மணித்தியாலங்களுக்கு போதியளவு நீராகாரம் அருந்த வேண்டும். குருதி வழங்கியவர்கள் பிரத்தியேகமான போசாக்கான உணவை உட்கொள்ளத் தேவையில்லை. சாதாரண உணவு உள்ளெடுப்பே பழைய நிலையை அடையப் போதுமானது.

எமது மாதாந்த தேவை அதிகரித்துள்ள இவ்வேளையில் குருதிக்கொடையாளர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு சமூக நற்பணி மன்றங்களின் ஆதரவுடன் நடமாடும் இரத்த தான முகாம்களை நடாத்துவதன் மூலமே தேவையை ஈடுசெய்ய வேண்டியுள்ளது. இது ஒரு இரத்ததான நிகழ்வாக மட்டுமன்றி சமுதா யத்தின் மத்தியல் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத் தும் சந்தர்ப்பமாகவும் அமையும்.

இரத்ததானம் செய்ய விரும்பும் நிறுவ னங்கள், கழகங்கள் யாழ்.போதனா வைத்தி யசாலை இரத்த வங்கியுடன் எந்நேரம் தொடர்பு கொண்டாலும் நாம் அவர்களது பிரதேசத்தில் மக்கள் மத்தியில் இரத்தானம் பற்றிய கருத் தரங்குகளை நடாத்த இலகுவாக நடவடிக்கை எடுப்போம்.

எனவே எமது பிரதேசத்திலுள்ள பாட சாலைகள், பல்கலைக்கழகம், கல்வி நிறுவ னங்கள், சனசமூக நிலையங்கள், விளை யாட்டுக் கழகங்கள், சமூக நற்பணி மன்றங் கள், சமய நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் அனைவரும் எம்முடன் இணை ந்து உதிரம் தந்து எம்முறவுகளின் உயிர் காக்கும் உத்தமமான பணியை நாளைய தினத்திலேயே தங்களது சமூகக் கடமையாகச் செய்ய அன்பாக அழைக்கின்றோம்.

**செல்வி ச.சிந்துஜா**
வைத்திய அதிகாரி,
இரத்தவங்கி,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

# தமிழர்களுக்கு சம அந்தஸ்து வழங்கி பிரச்சினையை விரைவில் தீர்க்க வேண்டும்

## இந்திய பாதுகாப்பு தொடர்பான கல்வி மற்றும் ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர்

(புதுடில்லி)

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து வழங்கி பிரச்சினையை சாத்தி யமான அளவு விரைவாக தீர்க்க வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பது இலங்கையின் கடமை.

இந்தியா தேவைப்படின் உதவிகளை வழங்கும் என்று பாதுகாப்பு தொடர்பான கல்வி மற்றும் ஆய்வு நிலையத்தின் பணிப் பாளர் நாயகம் நரேந்திரசிங் சிசோடியா தெரி வித்தார்.

நிலையான அமைதி, முன்னேற்றம், ஸ்திரத்தன்மை தேவையெனின் இனப் பிரச் சினைக்கு காத்திரமான தீர்வு அவசியம் என் றும் கூறினார்.

மேற்படி கற்கை நிலையத்தில் நேற்று முன்தினம் தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர் களைச் சந்தித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர்கூறுகையில்,

தமிழ் மக்கள் எந்த வகையிலும் நசுக்கப் படாது. அவர்களின் அரசியல் அபிலாஷை களைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வை விரை வாக இலங்கை அரசு முன்வைக்க வேண் டும்.

அது 13 ஆவது திருத்தச் சட்டமாகவோ அல்லது அதனை விடக் கூடியதாகவோ இருக்கலாம். எவ்வாறெனினும் தமிழர்களின் இனப்பிரச்சினை அரசியல் ரீதியாக தீர்க்கப் படாது போனாலும் மேலும் சில சக்திகள் உரு வாகவே வழிவகுக்கும்.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான அபிலாஷைகளைத் தீர்க்க மிகவும் பொருத் தமான சந்தர்ப்பம் தற்பொழுது கிட்டியுள்ளது. அதனைத் தட்டிக் கழித்தால் அழிக்கப்பட்ட பிரபாகரனை மீண்டும் உயிர்ப்பித்த நிலையே உருவாவதாக இருக்கும் என்றார்.

இங்கு விளக்கமளித்த அரசியல் பாதுகாப் புத் துறை சிரேஷ்ட ஆய்வாளர் கெப்டன் அலோக் பென்சா தெரிவிக்கையில், இலங் கை அரசாங்கம் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்க வேண்டிய காலம் கனிந்துள் ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷை களை ஒருபோதும் தட்டிக் கழிக்கக் கூடாது. இதனை பல சிங்களத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சமஷ்டி அடிப்படையில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது பொருத்தமாக இருக்கும். சமஷ்டி என்று உச்சரித்ததுடன் சிங்கள மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்படுகின்றது.

சமஷ்டி குறித்து அஞ்ச வேண்டியதில்லை. அது ஓர் அதிகாரப் பரவலாக்கல் மட்டுமே. சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாட்டிலும் இந்த முறையே உள்ளது என்றார். (ஓ-6)

# மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட போட்டியில் பங்குபற்ற வுள்ள வர்களுக்கான அமைச்சருட னான சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அமைச்சரின் காரியாலயத் தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் மாகாண மட்ட போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை அழைத்து செல்லவுள்ள ஆசிரியர்கள், பாடசாலை அதி பர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உடற் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆகியோர் தவறாது பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இச் சந்திப்பின் போது பயண ஒழுங்குகள், தங்குமிட வசதி, உணவு போன்ற விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம்

(சாவகச்சேரி)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தி யாலயத்தில் திரிசாரணர்களுக்கான சின்னம் சூட்டும்வைபவம்பாடசாலைவளாகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது என்று மாவட்ட ஆணையாளர் கு.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (6-29)

# திலகரட்ண டில்சான், மலிங்க பிரகாசம்; பாகிஸ்தானை வீழ்த்தியது இலங்கை

(லண்டன்)


துடுப்பாட்டத்தில் டில்சானும் பந்து வீச்சில் மலிங்கவும் பிரகாசிக்க இலங்கை அணி 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் 3ஆவது போட்டியில் பிரிவு எப் ஐச் சேர்ந்த இலங்கை-பாகிஸ்தான் அணிகள் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஜெயசூரியா-டில்சான் ஜோடி இணைந்து சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 4.3 ஓவர்களில் 50 ஓட்டங்களை எட்டியது.

இதில் சனத் ஜெயசூரியா 24 பந்துகளில் (2 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 26 ஓட்டங்களை எடுத்த போது



ஆட்டமிழக்க இலங்கை அணி 9 ஓவர்களில் 81 ஓட்டங்களை எடுத்து முதலாவது விக்கெட்டையிழந்தது.

தொடர்ந்து சங்கக்கார களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்சான் 39 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 46 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 10.5 ஓவர்களில் 89 ஓட்டங்களை எடுத்து 2 ஆவது விக்கெட்டை இழந்தது.,

இந்நிலையில் தொடர்ந்து களமிறங்கிய ஜெயவர்த்தனா சிறப்பாக துடுப்பெடுத்தாட இலங்கை அணி 12.4 ஓவர்களில் 100 ஓட்டங்களை கடந்தது. எனினும் மறுமுனையில் அணித் தலைவர் சங்கக்கார 16 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 15 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சாமர சில்வா 8 ஓட்டங்களுடன் வெளியேற இலங்கை அணி 16.1 ஓவர்களில் 128 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது. தொடர்ந்து ஜெயவர்த்தனா 19, முபாரக் 5 ஓட்டங்களுடனும் குலசேகர பூச்சியத்துடனும் ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது. இதில் மத்யூஸ் 9, மலிங்க 2 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். உதிரிகளாக பாகிஸ்தான் அணியால் 20 ஓட்டங்கள் வழங்கப்பட்டது.

பந்துவீச்சில் உமர் குல், அப்ரிடி மற்றும் அஜ்மல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 151 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சல்மான் பட் பூச்சியத்துடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 0.3 ஓவர்களில் ஓட்டமெதனையும் சேர்க்காமல் முதலாவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய சொகைப் மலிக் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 20 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 28 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து அணித்தலைவர் யூனிஸ்கான் களமிறங்க மறுமுனையில் அக்மல் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 5.3 ஓவர்களில் 35 ஓட்டங்களை எடுத்து 3 ஆவது விக்கெட்டையிழந்து தடுமாறியது.

இந்நிலையில் களமிறங்கிய மிஷ்பா உல்ஹக், யூனிஸ்கானுடன் இணைந்து சிறப்பான இணைப்பை வழங்கினார்.

இந்த ஜோடியின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்ட பாகிஸ்தான் அணி 15.1 ஓவரில் 100 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தது.

இதில் மிஸ்பா உல்ஹக் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 15.3 ஓவர்களில் 101 ஓட்டங்களை எடுத்து 4ஆவது விக்கெட்டையிழந்தது.

அடுத்து அலாம் களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் யூனிஸ்கான் 37 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 131 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் உமர் குல் 9 ஓட்டத்தை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்து வீச்சில் மலிங்க 4 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் முரளிதரன் 2 விக்கெட்டுக்களையும் மத்யூஸ், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் பதம் பார்த்தனர்.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த திலகரட்ண டில்சான் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்தன.

# தென்னாபிரிக்க அணியிடம் இங்கிலாந்து அணி வீழ்ந்தது

## ஜக் கலிஸ் சகல துறையிலும் அசத்தல்

ஜக் கலிஸின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது.

ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது.

இதில நேற்று முன்தினம் நோட்டிங்காமில் நடைபெற்ற சுப்பர்-8 சுற்றின் இரண்டாவது போட்டியில் பிரிவு ஈ யைச் சேர்ந்த இங்கிலாந்து தென்னாபிரிக்க அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பொப்ரா 2 ஓட்டங்களுடனும் ரைட் ஒரு ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 1.5 ஓவர்களில் 5 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

இந்நிலையில் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த பீற்றர்சன்-ஷா ஜோடி நிதானமாக துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தது.

எனினும் பீற்றர்சன் 17 பந்துகளில் (4 பவுண்டரிகள் அடங்கலாக) 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 5.2 ஓவர்களில் 25 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 3ஆவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஷா-கொலிங்வூட் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 43 பந்துகளில் 53 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது கொலிங்வூட் 19 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய போஸ்ரர், மாஸ்கரன்கஸ் ஆகியோர் தலா



ஒரு ஓட்டத்தை மாத்திரம் எடுத்து வெளியேறினர்.

அடுத்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஓவைஸ் ஷா 33 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க இங்கிலாந்து அணி 14.5 ஓவர்களில் 88 ஓட்டங்களை எடுத்து 7ஆவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்களும் சோபிக்காத நிலையில் இங்கிலாந்து அணி 19.5 ஓவர்களில் 111 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் பிரோட், ரஷீட் ஆகியோர் தலா 09 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் பார்னர் 3.5 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜக் கலிஸ், வான்டேர் மேர்வ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், மோர்கல் மற்றும் போத்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 112 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி; ஆரம்பத்தில் அணித்தலைவர் சிமித் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 3.3 ஓவர்களில் 17 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து முதலாவது விக்கெட்டை இழந்தது.

எனினும் இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த கலிஸ்-கிப்ஸ் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 68 பந்துகளில் 74 ஓட்டங்களை எடுத்து அணியை மீட்டெடுத்தனர்.

இதில் கிப்ஸ் 30 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 30 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டி வில்லியர்ஸ் களமிறங்க மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கலிஸ் 46ஆவது பந்தில் அரைச்சதத்தை கடக்க தென்னாபிரிக்க அணி 16.2 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் டி வில்லியர்ஸ் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 17.3 ஓவர்களில் 108 ஓட்டங்களை எடுத்து 3ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து டுமினி களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட தென்னாபிரிக்க அணி 18.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 114 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஜக் கலிஸ் 49 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 57 ஓட்டங்களையும் டுமினி 2 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரோட், சுவான் மற்றும் ரஷீட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சகல துறையிலும் ஜொலித்த தென்னாபிரிக்க அணியின் ஜக் கலிஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 2 புள்ளி களைப் பெற்று பிரிவு ஈ யில் முதலிடத்தைப் பிடித்தது.

## இருபது-20 பெண்கள் உலகக்கிண்ணம்

# அரைச்சதம் அடித்தனர் எட்வோட்ஸ், ரெய்லர் இங்கிலாந்து பெண்கள் அணி வெற்றி




எட்வோட்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இங்கிலாந்து பெண்கள் அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐ.சி.சி. இருபது-20 பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் தயூன்ரனில் நடைபெற்ற லீக் சுற்றின் 2 ஆவது போட்டியில் குழு பி யைச் சேர்ந்த இங்கிலாந்து-இந்திய பெண்கள் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியப் பெண்கள் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மிதாலி ராஜ் 29 ஓட்டங்களையும் நைக் 24 ஓட்டங்களையும் சொப்ரா 17 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் கொல்வின் 3 விக்கெட்டுக்களையும் ஷோவ் 2 விக்கெட்டுக்களையும் மார்ஷ், எட்வோட்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து பெண்கள் அணி எட்வோட்ஸ்-ரெய்லர் ஜோடியின் இணைபிரியாத ஆட்டத்தின் மூலம் 15.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 113 ஓட்டங்ளைக் குவித்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் சி.எம். எட்வோட்ஸ் 53 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்சர்கள் உட்பட) 61 ஓட்டங்களையும் எஸ்.ஜே.ரெய்லர் 41 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 50 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

ஆட்டநாயகியாக இங்கிலாந்து அணித் தலைவி சி.எம். எட்வோட்ஸ் தெரிவானார். இவ்வெற்றியின் மூலம் இங்கிலாந்து பெண்கள் அணிக்கு 2 புள்ளிகள் கிடைத்தது.

# யாழ். புகையிரதப் பாதையில் குடியிருக்கும் சொந்தக் காணியில்லாதவர்களுக்கு அரச காணி

## யாழ். மேலதிக அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புகையிரத சேவையினை ஆரம்பிப்பதற்கான வேலைத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக கடந்த கால போரில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து புகையிரத திணைக்களங்களிற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களில் குடியேறியிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு யாழ்.அரச அதிபரால் பிரதேச செயலகங்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மக்களில் பெரும்பாலானவர்கள் வலிகாமம் வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் குடியேறிய மக்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம் மக்களை வெளியேற்றும் நடவடிக்கை தொடர்பாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம்,பி.பி.சிக்கு கருத்துத் தெரிவிக்கையில்;

மீளவும் ரயில்வே திணைக்களத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் முகமாக ஏற்கனவே அந்தப் பகுதிகளில் சட்டரீதியற்ற முறையில் குடியிருப்பவர்களை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிடைத்த தகவல்களின் பிரகாரம் 5 பிரதேச செயலர் பிரிவில் விபரங்கள் கோரப்பட்டது.

இதில் 247 குடும்பங்கள் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் குடியிருப்பதாக அறியக்கிடைத்திருக் கின்றது. அதேவேளை இரண்டு பொதுக் கட்டடங்களும் சிறிய கோவில் ஒன்றும் அமைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது வருடங்களிற்கு முன்னர் இடம்பெயர்ந்த மக்கள் இருப்பிட வசதியற்ற நிலையிலேயே இவ்விடங்களில் குடியேறியுள்ளனர். இவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு குறிப்பிட்ட காலப்பகுதியை கொடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

காணி இல்லாத மக்களிற்கு காணி வழங்குவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டிருக் கின்றன. இதற்காக அரசாங்கக் காணிகள் தொடர்பான விபரங்கள் சேகரிக்கப்படு கின்றன. மாற்று ஏற்பாடுகள் இருக்கும் பட்சத்தில் அவற்றிற் கான சிபார்சுகள் முன்வைக்கப் படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-5,14)

### புலிகளுடன்...

பணிகளைப் பாராட்டிய நீதிபதி அவரை ஒரு நாகரிகமான மனிதர் என்றும் தான் கொண்டிருந்த ஒரு கொள்கைக்கான காரணத்தினால் அவர் சட்டத்தை மீறி நடந்தார் என்றும் குறிப்பிட்டார். (ந-14)

### முல்லை. சுகாதார...

சண்முகராஜா,புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரியான இளஞ்செழியபல்லவன் ஆகியோரே படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர்கள்.

இவர்களில் கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தம்பிமுத்து சத்தியமூர்த்தியை மட்டுமே நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் பயங்கரவாதக் குற்றத்தடுப்பு விசாரணைப்பிரிவினர் முன்னிலைப் படுத்தியுள்ளனர்.

மருத்துவர் சத்தியமூர்த்தியுடன் கேதீஸ் என்பவரையும் ஜெயலக்ஸ்மி என்ற பெண்ணையும் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றில் முன்நிலைப்படுத்தினர்.

கேதீஸ் மருத்துவர் என்றும் ஜெயலக்ஸ்மி தாதி என்றும் இவர்கள் இருவரும் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டுள்ளனர் என்றும் நீதிமன்றத்தில் பயங்கரவாத குற்றத்தடுப்புப் விசாரணைப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கேதீஸ் என்பவர் தரம் 11 வரை மட்டுமே கல்வி பயின்றிருக்கிறார் என்றும் அவருக்குப் புலிகள் மருத்துவப் பயிற்சி வழங்கியிருப்பதாகவும் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மூவரையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிவான் வழங்கினார்.

படையினரின் தடுப்புக் காவலில் நான்கு மருத்துவர்கள் இருக்கின்ற போதும் அவர்களில் ஒருவரை மட்டுமே நீதிமன்றத்தின் முன் நிலைப்படுத்தி ஏனையவர்கள் குறித்த தகவல்களை பயங்கரவாத குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் மறைத்திருப்பது பலத்த சந்தேகங்களை தோற்றுவித்திருக்கின்றது.

படையினரின் தடுப்புக் காவலில் உள்ள மருத்துவர்களில் துரைராஜா வரதராஜா குண்டுச் சிதறல்கள் காரணமாக காயம் அடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் பொலிஸாரின் கண்காணிப்புடன் பராமரிக்கப்பட்டு வந்தார்.

ஏனைய மூவரும் கொழும்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே இவர்களில் ஒருவரை மட்டும் நீதிமன்றத்தில் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் முன்நிலைப்படுத்தியிருந்தனர். (ந-5)


**படிவங்கள் விற்பனையாகிறது**

★ விவசாய அபிவிருத்தி கம நல சேவைகள் அமைச்சின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான படிவம்.

★ அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதிலாட்களை பதிவு செய்வதற்கான படிவம்.

★ வடக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூல குடும்பநல உத்தியோகத்தர்களைப்(மருத்துவ மாதர்) பயிற்றுவிப்பதற்கான ஆட்சேர்ப்பு படிவம்.

படிவங்கள் யாவும் வர்த்தமானியுடன் விற்பனையாகிறது.

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4 , ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C-2577)

**லாவா வைத்திய நிலையம்**
90/7,பொற்பதி வீதி, கொக்குவில்.
யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களின் சேவையில்
பொது வைத்தியம்
குழந்தை வைத்தியம்
தோல் வைத்தியம் பெண் நோயியல் வைத்தியம்
உடல் பருமனைக் குறைப்பதற்கான சிகிச்சைகள்
இரத்த , சல பரிசோதனைகள். (C-2576)


# புலிகளை வெற்றி கொள்வதில் விமானப்படைக்கு அளப்பரிய பங்கு

## பாதுகாப்பு செயலர் புகழாரம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மனிதாபிமானப் போர் நடவடிக்கைகளின் போது படையினரால் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை விட பாதுகாப்புப் படையினரே முக்கியத்துவம் பெறுகின்றனர் என்பதை நாம் கருத்திற்கொண்டிருந்தோம்.

அதற்கேற்றவாறே எமது நடவடிக்கைகளையும் முன்னெடுத்தோம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மனிதாபிமானப் போரின் போது விமானப் படையினர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. அவர்களின் பூரண ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு போன்றனவே புலிகளை முற்றாக அழிப்பதற்கு வழிவகுத்தன.

விடுதலைப் புலிகளுடனான நான்காம் கட்ட ஈழப் போரின் போது விமானப் படையினர் வழங்கிய பங்களிப்பை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று காலை கட்டுநாயக்காவிலுள்ள விமானப்படைத்தளத்தில் இடம்பெற்றது.

விமானப் படைத்தளபதி எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக்க,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள்,ஹெலிகொப்டர்கள் மற்றும் ரேடார் கருவிகள் போன்றனவும் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே பாதுகாப்பு செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந-5)

### முகாம்களில் தடுத்து...

சென்றுதங்குவதற்கு தயாரான நிலையில் இருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் என்கின்ற இந்த சர்வதேச மனித உரிமைகள் அமைப்பே நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

முட்கம்பிவேலிகளிற்குள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்த மக்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படவேண்டும். பத்து வயதிற்கும் அறுபது வயதிற்கும் இடைப்பட்டவர்கள் முகாம்களுக்குள்ளேயே முடக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டால் உறவினர்களுடன் தங்குவதற்கு தயாராகவே இருக்கிறார்கள். எதேச்சதிகாரமாக மக்கள் தடுத்து வைக்கப்படுவது, அவர்களது சுதந்திர நடமாட்டம் தேவையற்ற வகையில் கட்டுப்படுத்தப்படுவது என்பன சர்வதேச சட்டங்களிற்கு முரணானது.

மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களை சட்டரீதியற்ற வகையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை இலங்கை அரசு உடன்டியாக முடிபிற்குக் கொண்டு வரவேண்டும் என அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து இலங்கை அரசின் சார்பில் இதுவரை பதிலளிக்கப்படாத போதும் முகாமிலுள்ள மக்களை விடுதலைப் புலிகளாகவோ அல்லது அவர்களது ஆதரவாளர்களாகவோ கருதவில்லை என கூறியுள்ள அரசு இந்த மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் கடுமையான அளவில் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (ந-5,14)

### த.தே.கூட்டமைப்...

தொடர்பாக மாவை சேனாதி ராஜா பி.பி.சிக்கு தெரிவிக்கையில்;

இலங்கையில் தமிழர்கள் கடந்த சில மாதங்களாக பட்டதுன்பங்கள்,அவலங்கள், பேரழிவுகள் பற்றியும் தற்பொழுது முட்கம்பிகளுக்குள் இராணுவம் புடைசூழ நிற்கின்ற முகாம்களிற்குள் முடக்கப்பட்டுக் கிடக்கின்ற அவலங்களைப் பற்றியும் அவர்கள் மீளக் குடியேற்றப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் நாங்கள் எடுத்துச் சொன்னோம்.

வன்னியில் மட்டுமல்ல; வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும் யுத்தம் முடிந்து விட்டதாக அரசாங்கம் கூறுகின்றது.

எனவே தமிழ்ப் பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள இராணுவ முகாம்கள்,சோதனைச் சாவடிகள் என்பன அகற்றப்பட வேண்டும் என்றும் அத்வானி யிடம் எடுத்துக் கூறினோம்.

அவர் மிகவும் அவதானமாக எமது கருத்துக்களை கேட்டறிந்தார். நாங்கள் தமிழ் மக்களை கைவிடமாட்டோம் என்றும் அவர்களிற்கு ஒரு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கும் தற் போது அவர்கள் அனுபவிக்கின்ற துயரங்களிற்கும் ஒரு தீர்வுத் திட்டமும் அதற்கான மாற்றுத் திட்டமும் பரிசீலிப்பதற்கு தயாராக இருப்பதாகவும் கூறினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந-14)

### 6 இலட்சத்து 60...

பொது மக்கள் முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

அவர்களை மீளக் குடியமர்த்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், அவை துரிதகதியில் நடத்தப்படுகின்றனவா என்பது குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளை முகாம்களில் உள்ள மக்களின் வைத்திய நடவடிக்கைகளுக்கான அடிப்படை வசதிகள் மிகவும் தாழ்ந்த மட்டத் தில் இருப்பதாகவும் அநேகமான வைத்திய சாலை களில் சீரான நீர்ப்பாசன வசதி இல் லாத நிலை காணப்படுவதாகவும் இதனைக் கருத்தில் கொண்டு தனியார் துறையினருடன் இணைந்து வைத்தியசாலைகளுக்கான சீரான நீர்ப்பாசன திட்டத்தை ஏற்படுத்த முயற்சிப் பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

### தமிழர்களுக்கு உரிமை வழங்க...

ஐ.நாவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பான் கீ மூன், "போரின் இறுதிக் கட் டத்தில் நடந்த சர்வதேச சட்ட விதி முறை மீறல்களை கண்டறிந்து அதற்குக் காரண மானவர்களைப் பொறுப்பாக்க வெளிப்படை யான விசாரணை நடத்துவது தொடர்பாக அளித்த உறுதிமொழியை நிறைவேற்ற வேண்டும் என்று கோரி ஜனாதிபதி ராஜபக்ஷ வுக்கு தான் கடிதம் எழுதப் போகிறேன் என்று கூறியுள்ளார்.

கடந்த மாதம் 22,23 ஆம் தேதிகளில் இலங்கைக்குச் வந்த பான் கீ மூன்,அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதான முள்ளிவாய்க்கால் பகுதியை ஹெலிகொப்டர் மூலம் பார்வையிட் டார்.

அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பான் கீ மூன், அங்கு கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் எண்ணிக்கை ஒப்புக் கொள்ள முடி யாத அளவிற்கு அதிகமானது என்று கூறி யிருந்தார்.

போர் முடிந்துவிட்டது என்று அரசு அறி வித்துவிட்ட நிலையில் ,பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தேவையான நிவாரணம்,மறு வாழ்வு ,மீள் குடியமர்த்தல்,அவர்களுக்கு அர சியல் ரீதியான உரிமைகளை உறுதி செய்யும் இணக்கப்பாடு ஆகியன குறித்து அளித்த உறுதிமொழிகளை இலங்கை அரசு உடனடி யாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறிய பான் கீ மூன்,இரு தரப்பு அறிக்கையில் ஒப்புக் கொண்டு அளித்த உறுதிமொழிகளை அரசு நிறைவேற்றுவது அவசியம்.

இலங்கையின் சிறுபான்மை மக்களான தமிழர்களுக்கு உரிய அரசியல் ரீதியான அதி காரப் பகிர்வை அளிக்கும் நடவடிக்கைகளை தொடக்க வேண்டும்,அதனைச் செய்யத்தவறி னால் வரலாறு திரும்புவதை தடுக்க முடியாது.

தமிழ் சிறுபான்மை மக்களையும்,மற்றவர் களையும் அரசு உடனடியாக அணுகி அவர் களிடையே இணக்கப்பாட்டை உருவாக்கும முதல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண் டும்.வரலாறு மீண்டும் திரும்பக் கூடாது என்று நினைத்தால் இதனைச் செய்ய வேண்டும், உடனடியாகச் செய்ய வேண்டும். மீண்டும் சொல்கிறேன் அதனை உடனடியாகச் செய்ய வேண்டும்.

தற்பொழுது இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்களில் 80 வீதத்தினரை இந்த ஆண்டின் இறுதிக்குள் அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்த அரசு உறுதியளித்துள்ளது நம்பிக்கையளிக்கிறது. இடம் பெயர்ந்த தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களின் நிலை மிகக் கடினமானதாகவுள்ளது.அங்கு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்,அவர்கள் தங்கள் பகுதிகளுக்குச் சென்று வர சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும். தங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து கொள்ள அனுமதிக்க வேண்டும்.

இவை தொடர்பாக தாம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்புவதாக பான் கீ மூன் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (ந-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.